Sam Blum

V 6 No. 38 28 Sep 1933

JL
700 211, M281CN
N33.6.38
189162

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF B...
19 JAN 1934

Vol 6.] 1933 ஹு செப்டம்பர் மீ 28உ [No. 38

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 693
2. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை 695
3. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 697
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 699
5. கலித்தொகை (பாலைக்கலி, 27)
T. A. கனகசபாபதி முதலியார் 701
6. காற்றுமழை (அங்கம் 4. களம் 1.)
Shakespeare's Tempest 702
7. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பியல்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 704
8. அமீல் (Henri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 705
9. பழமுதிர்சோலை—நாலடியார் நகை
"மதுகரம்" 707
10. வர்த்தமானம் 708

கலாநிலயம்

189162

புன்மையின் மேன்மை.

மித்திரன் போலநின்றும் மெய்ம்மையைத் தந்துதவாமையே கொடிது. மதத்தினைப் பகைத்தெதிர்க்கும்நாத்திகர்களால்வருந்தீங்கு,பார்க்குமிடத்து,மிகச்சிறிது.நாத்திகமன்றிவேறொன்றும் நினைப்பதற்கறியாத சில சிற்றினத்தவரைச் சுற்றமாய்ச்சூழ்ந்துகொள்வதன்றி அதனால் அதிகம் ஒன்றும் செய்வதற்கியலாது. மனிதனுடைய சுகந்தான் வாழ்க்கையின் நோக்கமும் முடிவும் என்று, மனத்தைச் செலுத்தியோ செலுத்தாமலோ, ஒரு மங்கிய எண்ணம் எக்காலமும் இருந்து உருள்வதால், சுகத்திற்கு மாறாகத் துன்பமே பெருகுகின்ற உலகப்போக்கினைக் காணுமளவில், தன்னுடைய நோக்கத்திற்கும் உலகத்தின் போக்கிற்கும் ஒவ்வாமை புலப்படுதலும், மனிதனது அகங்காரமானது கடவுள் தலையில் கைவைக்கப் புகுகின்ற ஒரு கோலமே நாத்திக மென்ன நடமாடுகின்றது. கடவுளை மறுப்பவர்களைத் தூண்டித்தூண்டிக் கேட்போமாயின், அவர் உரைகளின் சாரம், "கடவுள் இல்லை யென்பது தெளிந்தேனாதலின், கடவுளை மறுக்கின்றேன்" என்ற நேர்முறைத் தர்க்கத்தைத் தழுவாமல், "உலகம் இவ்வாறு இருத்தலின், கடவுள் இல்லை என மறுக்கின்றேன்" என்னும்படி அமைந்திருக்குந் தன்மையை நுனித்துத் தெரிந்துகொள்ளலாம். ஏனெனில், மனிதன் தன்னுடைய அகங்காரத்தினால் இந்த உலகத்தை விசாரிக்கு மொரு நியாயாதிபதியாகத் தன்னைத் தானே நியமித்துக்கொண்டுவிடுகின்றான். இந்தப் பேரண்டங்களனைத்தும் தன்னுடைய சுகத்திற்காகத் தன்பொருட் டன்றோ அமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்னுமோர் எண்ணம் அவனுடைய சிறிய தலையினுள் எப்படியோ புகுந்து சுழல நேர்கின்றது. பிரபஞ்சத்தின் காரியங்களை மிகையுங் குறையுமின்றி நடுநிலைநின்று நோக்குவோமாயின் இதன்பிழை தெரியவரும். நம்முடைய காரியமாக இல்லை பிரபஞ்சம்; தன்னுடைய காரியம் எதனையோ ஒன்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு இப்பிரபஞ்சம் நிகழலாம்; அக்காரியத்திற்கெதிர் மனிதரது மிகப்பெரிய நோக்கங்களெல்லாம் ஒருகடுகளவினவாகத் தோன்றும். இந்தத் தோற்றம் ஒரு காலல்லாக்கால் ஒருகால் எத்திறத்தினோர்க்கும் வாய்க்காமற் றீராதாகையால், நாத்திகத்திற்கு அடிப்படையான அகங்காரம் மெல்லமெல்லக் கட்டுத்தளர்ந்து தள்ளாடி வீழாமல் இறுதிவரையில் தப்புவதென்பதுஇயலாது. நாத்திகத்தினின்று அகங்காரம் பிறக்கின்றதென்று கொண்டாலும் சரி, அகங்காரத்தினின்று நாத்திகம் பிறக்கின்றதென்று கொண்டாலும் சரி, அவையிரண்டும் ஒன்றையொன்று மாறிமாறி விழுங்கி வளர்வதால் மற்றவர்க்கதனால் தீதொன்றும் நேர்வதற்கில்லை. மெய்யாய மதவுணர்வினைச்சென்று அது ஒருபோதுந் தீண்டாது. அதுவுமன்றிக் கடவுளை மறுப்பதும் ஒரு வகையில் அவர் நிலைக்கு உறுதியேயாகும். (இதன் விளக்கத்தை முன்னர் 4-வது வால்யூம், 36, 37, 38, 39, 40-வது இதழ்களில், "மறுப்பதும் உறுதியாமே' என்னுந் தலைப்பி லெழுதியுள்ள கட்டுரைகளிற் காணலாம்).

மதத்தின்பால் தம் பகையை மறைக்காமற் காட்டுகின்றவர் நாத்திகர். மற்ற எல்லாவற்றையும் மறுத்து,

'கண்டதே காட்சி' என்னுங் கொள்கையில் கொண்டதே கோலம் என முடிகின்றவர் இவர். இவ்வாறின்றி மதத்தின்பால் உறவுமின்றிப் பகையுமின்றி நொதுமலரென்ன இருப்பவர் வேறொரு சாரார். இவர் நாத்திகரைப்போல் கண்டதேகோலமென்பதோடுநில்லாமல் இத்தோற்றங்களுக்கப்பால் யாதோவொரு ஆச்சரிய சக்தியுளதென்று ஒவ்வுகின்றனர். ஆயினும், "அது யாதென்பது நமக்குத் தெரியாது, தெரிந்துகொள்ளவும் இயலாது, ஆதலின் நம்மைக் கடந்ததில் நமக்கென்ன காரியம்" என்னச் சும்மா விருந்துவிடச் சொல்வார் இவர். இத்தகையவர்தம் நினைவுகளாலும் சொற்களாலும், மதப்பற்றுடையவர்களாய்த் தாம் இருக்க வேண்டுமென்று விரும்பி முயல்கின்ற சில ஜனங்களின் மனம் கலக்கமுற இயலும். ஏனெனில் பிரபஞ்ச மனத்திற்கும் அப்பாலாயிருக்கின்ற அம்மெய்ப்பொருளின் தன்மையைக் கண்டு விண்டவர் ஒருவருமில்லையாதலின், தெரியமாட்டாத தொன்றைத் தொடர்ந்துதான் என்ன பயன் என்று வாதிப்பவர் கொள்கைக்குப் பொதுமாநுட மனம் இணங்குதல் எளிதே. மெய்ப்பொருளின் தன்மை நமக்குத் தெரியமாட்டாதது என்று உரைப்பது நேரிதன்று. நம்மால் தெரிந்துகொள்ள மாட்டாமையே அம் மெய்ப்பொருளின் தன்மையாம் என்பதைத் தேர்ந்தவுடன் அதன் தன்மையை நாம் உணர்ந்துகொண்டவர்கள் ஆகின்றோமே. கல்விப் பயிற்சியும் புத்தியின் கூர்மையும்இல்லாதவர் இன்னபடி நுட்பஞ்செய்து நோக்கவல்லவராகா ராகையால், பொதுஜனங்கள், தெரிந்துகொள்ளப்படாமையைத் தெரிந்துகொண்டதே அதன் தன்மையைத்தெரியப்பெற்றப் பயனடைந்தாரென்பதைக் கருதாமல் இன்னும் அது தெரிந்துகொள்ளப்படாமலே நிற்கின்றதெனக் கருதி, அதனைத் தொடர்வதில் பயனில்லை என்று விட்டுவிடுதல் இயற்கைதானே. அறியாதவனாயிருப்பது மனிதனுக்கே உரியவோர் சிறப்புரிமையன்று; தான் அறிந்திலன் என்பதை அறிவதே அவன் உரிமை. அவனது அறியாமை அறிவு ஆகிய இரண்டையும் ஒன்றோடொன்று மயங்கவிடாமல் அவ்விரண்டின் எல்லையையும் அளவிட்டுவைப்பதால் அறிவின் பெருமையை அறியாமையை அறிவதிற்றானே காணலாம். கிரேக்க வித்தகர் ஸாக்ரிடீஸ் என்பவர் இந்நிலையை நன்கு விளக்கினார்—(இதன் விரிவை முன் நாம், 3-வது வால்யூம், 2, 3, 4, 5-வது இதழ்களில் "அறியாமை வேண்டப்படும்" என்னும் தலைப்பில் வரைந்துள்ள கட்டுரைகளிற் காணலாம்).

முதலிற் கூறிய நாத்திகர் மறுப்பார், இரண்டாவது வகையினர் அயர்வார். இனி, மூன்றாம் வகையினர் உளர்,இவர் எல்லாவற்றையும் அயிர்ப்பவர். முரண்படு கொள்கைகள் பற்பல இருக்கக்கண்டு ஒன்றையும் இவர் முழுமனதுடன் நம்புவதுமின்றி மறுப்பதுமன்றி ஒருகொள்கையை மற்றொரு கொள்கையால் எதிர்த்து எல்லாவற்றையும் சந்தேகம் என்னும் ஓரே கடலில்கரைத்துவிடுவது இவர் மதியின் திறம். நாத்திகர் இல்லையென்றுரைப்பது நேரிதோ என்பதும் ஐயம், இவர்களுக்கு, ஆத்திகர் உண்டென்று உரைப்பதும், ஐயம். "எதனையும் நம்பமாட்டோம் நாம்" என்பது இவர் பாடம். இத்தகையவர் உரைகளாலும் பொதுஜனங்களுக்குத் தீமை நேரலாமாயினும் இந்நிலை ஒருவர் மனத்தினும் நீடித்துநிற்க இயலாதாதலின் இதனில் அஞ்சுவதற்கு அதிகம் இல்லை. 'எதனையும் நம்பமாட்டோம்' என்கின்றவர்களும் தாம் கொண்டுள்ள ஐயம் தக்கதே என்று அதனில் நம்பிக்கை வைக்கின்றார்கள்! ஆதலினால், ஊக்கமுடைய ஐயமானது ஒருபோதும்ஐயமாகவே முற்றிலும் நின்றுவிட இயலாது. இல்லை என்று மறுப்பதும் உண்டென்று உரைப்பதும் தவறு என்று கூறுபவன், உண்டோ இல்லையோ என்று ஐயப்படுவதுதான் சரி என்று சொல்வதற்கு மாத்திரம் உறுதியும் உரிமையும் எங்கிருந்து பெற்றனனோ அறிதல் அருமை. ஆதலின், அந்த ஐயத்தின் மீது இந்த ஐயம் எய்தி ஒன்றையொன்று பொடிபட அரைத்துத் தீர்ந்துவிடக்கூடும்.

நாத்திகத்தின்மறுப்பும், அயர்வார்தம்வெறுப்பும், அயிர்ப்பார்தம் உழைப்பும் இவையெல்லாம் நிகழ்வதற்குக் காரணம், எண்ணியபடி எல்லாம் சுகமாக அமையாமைபற்றி இம் மானுடப்பிறவியை வறியதொன்றென்ன மதிக்கவேண்டிவருகின்ற அவலமேயாகும். புன்பிறவியென இதனைப் புகலப் புகுகின்றனரேயொழிய, அப் புன்மைபோன்ற தோற்றத்தினிடையே அதன் மேன்மை விளங்குவதை ஏன்தான் காணமாட்டாமல் கூசுகின்றனரோ தெரியவில்லை. மேன்மையின் நிலையை அறிந்தவர் ஒருவரும் புல்லர் ஆகமாட்டார். அவருக்கு உரிய மேன்மையாலேயே புன்மை விளங்குகின்றதென்றால், அம்மேன்மையின் மேன்மைக்குச் சான்று வேறு யாது வேண்டும். அமெரிக்க வித்தகர் **எமர்ஸன்** என்பவர் இந்த நுண்மையை மிகவும் அழகாகக் காட்டுகின்றார்—

We grant that human life is mean, but how did we find out that it is mean? what is the ground of this uneasiness, of this old discontent ? what is the universal sense of want and ignorance but the fine innuendo by which the soul makes its enormous claim ?

[மனித வாழ்க்கை மிகவும் அற்பமானதென்றே வைத்துக்கொள்வோம். மற்று, அது அற்பமானதென்பதைத்தான் நாம் தெரிந்துகொண்டது எங்ஙனம்? இந்த அவலத்திற்கும் அதிருப்திக்கும் ஆதாரம் என்ன ? எல்லாரும் ஒருபடித்தாய் உணர்கின்ற குறையும் அறியாமையும், நம்முடைய ஆன்மாவானது தனது மாபெரும் உரிமையைக் கேட்கின்றவோர் நுட்பமான குறிப்பேயன்றி வேறு யாவதா யிருத்தல்கூடும்]

இப்படியே, டேகார்ட் என்னும் தத்துவநூலாசிரியரும், "அலகிலா நிரந்தர நிலையின் நினைவு நம்மில் வேரூன்றியிருத்தலாற்றான், அலகும் அழிவும் உடையது நம்முடைய வாழ்க்கை என்னும் எண்ணம் நமக்குத் தோன்றலாகின்றது" என்னச் சாற்றுங்கால் எமர்ஸன் கருத்தே வேறோர் வகையில் விளக்கப்பட்டதாகின்றது. எனின், புன்மை என்னும் நினைவே நம்முடைய மேன்மையின் உண்மையாற்றான் நிகழ்கின்றது என்பதை உணர்வோமாயின், கடவுளையும் கடவுளைச் சார்ந்த மதங்களின் வாய்மையையும் மறுக்கவும் வேண்டா, அறியவல்லோம்அல்லோம்என்று அயரவும்வேண்டா, அறிதற்கு ஒன்றுளதோவென்று அயிர்க்கவும் வேண்டா.எனினும்இம்மேன்மை,புன்மையின் நினைவினுள் உறங்கிக் கிடக்கின்றதாதலால் அப்போதைக்கப்போது அதனைச் சற்றே எழுப்பித் தருவது அவசியம். இந்த உதவியைச் செய்யாமற் செய்கின்றவர் கவிகள். ஷேக்ஸ்ப்பியரும் கம்பரும், புல்லரைப் பற்றிப் பேசுமிடத்திலுங் கூடமானுடமேன்மையின் மாண்பையே நமதுள்ளத்தில் பிறப்பிப்பார். இன்னவர்களோடு கைகோத்துத் தருவதற்கு விழைகின்றது நம் **கலாநிலயம்.**

தமிழ்ப்பாடம் 88.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[682-வது பக்கத் தொடர்ச்சி]

மாயிரு ஞாயிறு பாரதப் போரின் மறையவங்ஙன்
பாயிரு ணீதந்த தென்னகண் மாயம் பவளநெற்றிச்
சேயுயர் மாமதில் சூழரங் கேச திரண்டுதித்த
வாயிர கோடி திவாகரன்போலொளி ராழிகொண்டே.

பதப்பிரிவு:—மா இரு ஞாயிறு பாரதம் போரில் மறைய அங்ஙன் பாய் இருள் நீ தந்தது என்ன கண் மாயம் பவளம் நெற்றி சேய் உயர் மாமதில் சூழ்அரங்கம் ஈச திரண்டு உதித்த ஆயிரம் கோடி திவாகரன் போல் ஒளிர் ஆழி கொண்டே.

அன்வயம்:—பவளம் நெற்றிச் சேய்உயர் மாமதில் சூழ் அரங்கேச, திரண்டுஉதித்த ஆயிரம்கோடி திவாகரன்போல் ஒளிர் ஆழிகொண்டு, மாயிரு ஞாயிறு மறைய அங்ஙன் பாரதப்போரில் பாய் இருள் நீ தந்தது என்ன கண்மாயம்.

பதவுரை.

பவளம் - பவளத்தாலாகிய, நெற்றி - உச்சியை உடையதும், சேய் - தூரத்தில், உயர் - உயர்ந்ததும் ஆகிய, மா - பெரிய, மதில்-மதில்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கம்-திருவரங்கத்தில் இருக்கின்ற, ஈச-ஈசனே,

திரண்டு - ஒன்றாகச்சேர்ந்து, உதித்த - உதயமான, ஆயிரம் கோடி - ஆயிரம் கோடி, திவாகரன் போல் - சூரியர்களைப்போல், ஒளிர் - பிரகாசிக்கின்ற, ஆழி கொண்டு - உன் சக்ராயுதத்தைக் கொண்டு,

மா இரு - மிகவும் பெரிய, ஞாயிறு - சூரியன், மறைய அங்ஙன் - மறையும்படி, நீ - நீ, பாய் - சூழ்கின்ற, இருள் - இருளை, பாரதப்போரில் - பாரதயுத்தத்தில், தந்தது - உண்டாக்கியது, என்ன - என்ன, கண்மாயம் - கண்கட்டுவித்தையோ! (இயம்புவாய்.)

விரிவுரை:—"என் மைந்தன் அபிமன்யுவைக்கொன்ற சயத்திரதனை, நாளைச் சூரியன் அத்தமனமாவதற்குள் நான் கொல்லேனாகில், நெருப்பிலே விழுந்து மாள்வேன்" என்று அர்ச்சுனன் பதின்மூன்றாம்நாள் போரின் இறுதியில் சூளுரைத்துச் சிவபெருமானை வணங்கி வரம்பெறுமாறு கிருஷ்ணனுடன் அவ்விரவு கயிலைக்குப் போயிருக்கவும், தருமன், விறல்நெறியாவது பொய்யிலது என்னும் கொள்கையால் பீமன்மகன் கடோற்கஜனைக்கொண்டு இச் செய்தியைத் துரியோதனனுக்குத் தெரிவித்துவிட்டனன். ஆகையால் மறுநாள் யுத்தத்தில் சுயோதனன் சயத்திரதனை ஒளித்துவிட அர்ச்சுனால் அவனைக் கொல்ல இயலவில்லை; பொழுதுபட இன்னும் சிறிதுநேரமே இருந்தது; அதற்குள் சயத்திரதனைக் கொல்லானாகில் சபதத்தின்படி அர்ச்சுனன் தீயில் விழுந்து உயிர்துறக்கவேண்டியவனாவான். மாமாயனாய கண்ணன், ஒருவரு மறியாமல், பனையளவு இருக்கும்போதே சூரியனைத் தன் சக்ராயுதத்தால் மறைத்துவிட்டான். இருளும் சூழ்ந்தது. தனஞ்சயனும்தன்சபதப்படி எரியில்விழுவதற்கு ஆயத்தமானான். இனித் தனக்கொருபயமில்லை என்று துணிந்த சயத்திரதன், அர்ச்சுனன் சாவதைத் தன் கண்களால் கண்டு களிக்கவேண்டி மறைவிடம் விட்டகன்று தீயில் விழும்தறுவாயிலிருந்த அர்ச்சுனனுக்கு எதிரில் வந்து நின்றனன். உடனே, கிருஷ்ணன் சூரியனை மறைத்திருந்த தன் சக்கிரத்தை விலக்கிவிடப் பகற்பொழுது இன்னும் இருப்பதுகண்டு அர்ச்சுனன் தன்எதிரில் எளிவந்து நின்ற சயத்திரதனை ஒரு பாணத்தால் கொன்றனன். இது பாரதக்கதை. இக்கதையின் குறிப்பை வைத்துக் கவி இச் செய்யுளைப் பாடியுள்ளார்.

"பாரதப் போரில் நான் படைஎடேன்" என்று துரியோதனனுக்கு வாக்குத்தத்தம்செய்திருந்தும் கிருஷ்ணன் இவ்விதம் தன் சக்கிரத்தை உபயோகப்படுத்தியது நீதியோவென்று சிலர் சந்தேகப்படுவதும், வாக்குப் பிறழ்ந்தாவது கண்ணன் தன்னை அண்டினவரும் தன்னுடைய உயிரிற்கு உயிரானவருமாய பாண்டவர்களைக் காத்த அருளை இது காட்டுகின்றதென்று இச் செய்கைக்குச் சிலர் சமாதானம் கூறுவதும் உண்டு. பிள்ளைபெருமாள் ஐயங்கார் இப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றி இங்குக் கருதவில்லை. இருண்ட பொருளால் ஒளியை மறைப்பது முறையாயிருக்க, ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமுடைய சக்கிராயுதத்தால் சூரியனை மறைத்ததும், உலகத்தில் இருள் பாயும்படி செய்ததும் எவ்வாறு? இது என்ன இந்திரசாலம்! என்றுஇச்செயலின் அதிசயத்தையேஇங்குப் பாராட்டுகின்றார்.

சோதித் திருவுரு வாகாயமாகச் சுருதிநன்னூல்[லைச்
சாதித்து நின்று தெளிந்துவிட் டேன்மிக்க தானவ
சேதித்த நேமித் திருவரங் காசங்கை தீரவுன்ற
னாதித் திருவுரு வின்பே ரணிநிற மானபின்னே. 13.

பதப்பிரிவு:—சோதி திரு உரு ஆகாயம் ஆக சுருதி நல் நூல் சாதித்து நின்று தெளிந்து விட்டேன் மிக்க தானவரை சேதித்த நேமி திரு அரங்கா சங்கை தீர உன்தன் ஆதி திரு உருவின் பேர் அணி நிறம் ஆனபின்பே.

அன்வயம்:—மிக்க தானவரைச் சேதித்த நேமித் திருவரங்கா, உன்தன் ஆதித்திருவுருவின் பேர் அணி நிறமானபின், சுருதி நல்நூல் சாதித்து நின்று, சோதித் திருஉரு ஆகாயமாகச் சங்கைதீரத் தெளிந்து விட்டேன்.

பதவுரை.

மிக்க - மிகுந்த, தானவரை-அசுரர்களை, சேதித்த-வெட்டியழித்த, நேமி - சக்ராயுதத்தை யுடைய, திரு அரங்கா - அழகிய அரங்கநாதனே,

உன்தன் - உன்னுடைய, ஆதி - ஆதியாகிய, திரு உருவின் - அழகிய உருவத்தின், பேர் - மிகுந்த, அணி - அழகிய, நிறம்-நிறமே, ஆனபின் - (அந்த ஆகாசம்) ஆகின்றதென்பதைக் கண்டபிறகு,

சுருதி- வேதங்களாகிய, நல் - சிறந்த, நூல் - சாஸ்திரங்களை, சாதித்து நின்று - பழகியறிந்து, சோதி - ஒளிபொருந்திய, திரு - அழகிய, உரு - உன்னுடைய உருவம், ஆகாசம் ஆக - ஆகாசமே என்று, சங்கை- சந்தேகம், தீர - சிறிது மில்லாமல், தெளிந்துவிட்டேன் - தெளிந்துகொண்டவன் ஆயினேன்.

விரிவுரை:—எங்கும் மயமாயிருக்கின்ற தன்மையினும், அதனின்று மற்ற பூதங்கள் யாவும் பிறக்கின்ற காரணத்தாலும்,பரம்பொருளானது ஆகாசரூபமாக

இருப்பதாக வேதங்கள் கூறும். நீல நிறத்தினால் திருவரங்கர் ஆகாசம் போன்றிருப்பதால் நம்கவி இவ்வரங்கரே அவ்வேதங்கள் கூறும் பரம்பொருள் என்பதைத் தெளிந்துகொண்டாரென்று பாராட்டுகின்றார்.

இலக்கணம்.

முன்னொருவாரம், மொழிக்கு இறுதியில் உயிர் வருவதென்றால் அது உயிர்மெய்யெழுத்தின் ஒலியாகிய உயிரொலியாயிருக்கக்கூடுமேயன்றி வரிவடிவோடு சேர்ந்து உயிராய் ஒலிக்கின்ற எழுத்தாக இருக்கமுடியாது என்பதை விளக்கினோம். ஆனால், சில இடங்களில், "பைங்தொடீஇ எழுந்திரு" என்றும், "நல்லபடாஅபறை" என்றும், "வரனசைஇயின்னுமுளேன்" என்றும் சில செய்யுள்களில் ஆங்காங்கு வந்திருக்கக் காணலாம். இவைகளில், தொடீஇ, படாஅ, என மொழியின் இறுதியில் உயிர் எழுத்துக்கள் நிற்பன போன்று தோன்றலாம். ஆயினும், இ, அ, என்னும் அவ்வெழுத்துக்களுக்கு அங்கு ஒலியில்லை. அவ்வதற்குமுன் இருக்கும் ஈ ஆ என்னும் உயிர் நெடில்கள் அளபெடுத்திருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு அடையாளமாக அவை வரிவடிவில் மாத்திரம் நிற்கின்றனவேயன்றி, அவை தமக்குரிய ஒலியோடுகூடிய எழுத்துக்க ளாகா. உயிரளபெடையின் இலக்கணத்தை முன் இவ்வால்யூம் 104-வது பக்கத்தில் காட்டியிருக்கின்றோம். பைங்தொடீ என்பதிலுள்ள ஈகாரத்தை இரண்டு மாத்திரைக்கு அதிகமாக மூன்று மாத்திரைகாறும் நீட்டி இசைத்தல் வேண்டும் என்பதற்கு அடையாளமே அந்த இ என்னும் எழுத்தாகையால், பைங்தொடீ இ, என்று இ யைத் தனித்து உச்சரிக்கப்படாது. அப்படியே, படா அ என்பதில், அ விற்குத் தனி உச்சரிப்பு இல்லை. ஆகையால் இப்படி அளபெடுத்துஇருக்கும் மொழிகளிலுங்கூட உயிரெழுத்து இறுதியில் இருக்கின்றதென்று சொல்வதற்கு இடமில்லை.

இங்குஉரைத்தவைகளால், நிலைமொழியின் இறுதி வருமொழியின் முதல் ஆகிய ஈரிடத்திலும் உயிர் நிற்கின்ற சொற்கள் என்றுரைப்பதன் பொருள் விளங்கி இருக்கும். மொழிக்கு முதலில் உயிரெழுத்துப் பன்னிரண்டும் வரும். அரசன், ஆனை, இளமை, என்பன போன்று உயிர் எழுத்துக்கள் நிற்கின்ற சொற்களைத்தான் உயிர்முதல் சொற்கள் என்று சொல்லலாம். தண்மை, காகம், பூனை என்பனபோல் உயிர்மெய் எழுத்துக்களால் துவக்குகின்ற சொற்களின் முதல் ஒலி த் க் ப் என்னும் மெய்யின் ஒலிகளாதலால் அவை ஒலியைக்கருதுங்கால் மெய்ம்முதற் சொற்களாகும்.

மொழிகள், ஓரெழுத்து ஒருமொழி யென்றும் எழுத்துத் தொடர்மொழி யென்றும் இருவகைப்படும், என்பதை முன்னர்க் கூறியிருக்கின்றோம். ஆ (பசு), ஈ (ஒரு ஜந்து), ஊ (மாமிசம்) ஏ (அம்பு) ஐ (நுண்மை, கோழை), ஓ (மதகினைமூடும் கதவு) என்று பொருள் தருகின்றபோது இந்த ஆறு உயிர்நெடில்களும் தாமே பெயர்ச்சொற்களாய் நிலைமொழிகளாக நிற்கலாம். அ, இ, உ, என்னும் உயிரெழுத்துக்கள், அ அரசன், இ எருது, உ ஆனை, எனச் சுட்டுப் பொருளில் இடைச்சொல்லாகியும் நிலைமொழிகளாக நிற்கலாம். எ, என்னும் வினாவெழுத்தும், எ உலகம் என, இடைச்சொல் நிலைமொழி யாகலாம். இப்படி உயிரெழுத்துக்களே பொருள்பெற்ற ஓரெழுத்தொரு மொழியாக நிலைமொழியாய் நிற்குங்காலையில் அந்நிலைமொழிகள் ஓரே எழுத்தா லானவைகளாதலால் உயிரை ஈற்றிலுடைய நிலைமொழிஎன்று சொல்வது பொருந்தாது—ஓரே உயிர்எழுத்தையுடைய மொழிக்கு முதலும் ஈறும் என்று வெவ்வேறாக இருக்க இயலாதாகையால். தீ, பூ, வா என்பனபோல் உயிர்மெய் ஓரெழுத்தொருமொழிகள் நிலைமொழியாயின், அப்பொழுது வேண்டுமெனின் ஒலியைக் கருதி, உயிரை ஈற்றிலுள்ள ஓரெழுத்துஒருமொழிஎன்பது ஒருவாறு பொருந்தலாம்.

எனவே, ஆ ஈ ஊ போன்ற உயிர்ஓரெழுத்து ஒருமொழிகளும், அ, இ, உ, என்னும் சுட்டு இடைச்சொல்லும், எ, என்னும் வினா எழுத்தும், அல்லது தீ, கை, போ, போன்ற உயிர்மெய் ஓரெழுத்து ஒருமொழிகளும், கிளி, வந்த, பரத்தை என்றவரும் உயிரீற்று எழுத்துத் தொடர்மொழிகளும், நிலைமொழியாகவும்; அரசன் ஆனை, இதழ் ஈகை, உலகம் ஊமை எயிறு, ஏழை, ஐயன், ஒட்டை, ஓடம், ஔவியம், என்பனபோல் உயிரெழுத்தை முதலிலுடைய சொற்கள் வருமொழிகளாகவும் நிற்க, இவ்விரு உயிர்களும் எவ்வாறு புணரும் என்பதற் குரிய விதிகள் பின்வருமாறு:—

A. நிலைமொழியும் வருமொழியும் வேற்றுமைத் தொடராயிருந்தாலும், அல்வழித்தொடரா யிருந்தாலும், தொகைநிலைத் தொடரா யிருந்தாலும் தொகாநிலைத்தொடரா யிருந்தாலும், எந்தத்தொடரா யிருந்தாலும்இங்குப்பின் கூறுகின்ற விதிகள் எல்லாவற்றிற்கும்பொருந்தும். மகரமெய்யை ஈற்றிலுடைய மொழிகள் வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணருங்கால் தொடரைநோக்கி ஒவ்வொருசமயம் கெட்டும், கெடாமலும் வரும் என்று முன் கூறியதுபோல், இவ்வுயிரும் உயிரீறும் புணர்கின்றவிதிகளில் வித்தியாசமில்லை. எனினும், நிலைமொழி உரிச்சொல்லாயின் விதி சிறிது மாறுபடலாம். அதைப் பின்னர்க் கூறுவோம்:

நிலைமொழி உயிரீறும் வருமொழி முதல் உயிரும் புணர்கின்றஇலக்கணத்திற்கு, நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர் என்னவென்று நோக்கவேண்டுமேயொழிய, வருமொழி முதலிலுள்ள உயிர், பன்னிரண்டில் எதுவாயிருந்தாலும் விதிஒன்றுதான். எனவே, நிலைமொழியாகும் உயிரெழுத்து அல்லது நிலைமொழி யிறுதியிலுள்ள உயிர், என்னவென்பதை நோக்கி அதற்கு இணங்க வருமொழிமுதலில் உள்ள உயிர்புணர்கின்ற விதங்களை அடுத்தநாள் பார்ப்போம்.

எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[691-வது பக்கத் தொடர்ச்சி]

கடவுளில் லாதா ரன்றோ கலங்கிட வேண்டு மம்மா.

தம் தந்தையாம் சடாயுவை எதிர்த்துப்பொருதவன் தலைகள் ஓர்பத்துடைய இராவணனை ஆதல்வேண்டுமென இலக்குவன் இயம்பியதை உளங்கொண்டு மதித்த இராகவன் சிறிது தூரம் செல்லாமுன், கடவுள் நாட்டிய மந்தரவரையெனச் சடாயு குருதிப் பரவையில் கிடக்கக் கண்டான். காண்டலும், வெள்ளியங்கிரியில் ஓர் அஞ்சனமலை வீழ்ந்ததென்னச் சடாயுவின் மேனியின்மீது இராகவன் வீழ்ந்து, உயிர்ப்பின்றி ஒரு நாழிகை கிடந்து பின்னர்ப் பயப்பய அயர்வுதீர்ந்து புலம்புவா னயினான்—

தந்தா தையரைத் தனயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே யுள்ளார் முடிந்தான் முனையொருவன்
எந்தாயோ வெற்காக நீயு மிறந்தனையோ
அந்தோ வினையே னருங்கூற்ற மானேனே.

[தம் தந்தைமாரைக் கொலைசெய்த புத்திரர்கள்எனக்குமுன் யார் இருந்தார். தயரதனாகியஒரு தந்தை முன்னரே, என் பிரிவிற்கு ஆற்றாமல் இறந்தான். என் தந்தையாகிய சடாயுவே, என்பொருட்டு நீயும் இறந்தனையோ; ஐயோ, தீவினையுடைய நான் என் தந்தையர் இருவர்க்கும் தடுத்தற்கு அரிய எமன் ஆனேனே]

பின்னுறவ தோராதே பேதுறவேன் பெண்பாலாள்
தன்னுறவ தீர்ப்பான் றனியுறவ தோராதே
உன்னுறவு நீதீர்த்தா யோருறவு மில்லாதேன்
என்னுறவான் வேண்டி யிடருறவே னென்றாயே.

[எனக்குத் தாய்போன்றவனே, பின்விளைவதைஆராயாமல், பொன்மான் தனக்கு வேண்டுமென்ற சீதையின் கவற்சியைத் தீர்ப்பதற்கு யான் மதிமயங்கிச் செல்ல, நீயோ தனியே சென்று இராவணனை எதிர்க்க இயலுமோ என்பதைக் கருதாமல் உன் உறவின் கடமையைத் தீர்த்துக் கொண்டாய். இனி ஒரு உறவும் இல்லாத நான் என்ன செய்து என்ன பெறுவதற்கு இப்பொழுது துன்ப மடைகின்றேன்]

மாண்டேனே யன்றோ மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரத மதனா னுயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றொழிந்த புன்றொழிலேன்
வேண்டேனிம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே

[அந்தணர்களுடைய குறையைத் தீர்க்கின்றேன் என்று ஓர்விரதத்தைமேற்கொண்டிருக்கின்றேன், அதனாற்றான் இன்னும் இவ்வுயிரைச் சுமக்கின்றேனே யொழிய இல்லையாகில் இப்பொழுதே உயிரை விட்டுவிடுவேன். இப்படி மரம்போல நீண்டுநின்று ஒழிகின்ற தீவினையுடைய நான் மாட்சிமை மிக அடைந்தேனன்றோ! சீ சீ! இந்தப் பெரிய மாயமுடைய இழிந்தபிறவியைவிரும்பமாட்டேன் விரும்பமாட்டேன்]

'வேண்டேன் இம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே' என இரங்கி நைந்து கரைந்துஉருகிநிற்பவர் எம்மனோரில் எத்தனை எத்தனையோ பலர். மற்று, இராமனு மிங்கு, எம்மனோரில் ஒருவனாய் இங்ஙனம் மாழ்கினானோ, அல்லது தன்னேரிலாத தானேயாய் அன்னது பேசினானோ ஆய்தலருமை. திருமகள் பிரிந்தாளென்னத் திகைப்பதும் தாதையர் மாய்ந்தாரென்ன மனம் புழுங்கி மாழ்குவதும் மனிதனாய்த் தோன்றி நின்ற தயரதன்மைந்தனுக் கடுத்ததேயன்றி, எண்கடந்தலகிலாத அவ் வாதியம் பரமனுக்கு எவ்வகையினும் ஏற்பனவல்ல. எற்றுக்கோ எம்பெருமான் புன்பிறவி மாமாயம் பூணுதற்குச் சித்தம் வைத்தான். அஃதறிவார் ஈங்கில்லை. ஆயினும் ஒன்று அறிய இயலும். கடவுளேயாயினும், மெய்யன்றிப் பொய்யாய வேடமெனத் தெரிந்தே புரிந்தாலும், மாநிடன்என்ற சொல்லிற்குப் பொருளாயபின், "வேண்டேன், இப் புன்பிறவிவேண்டேன்" என வெள்கி வெறுத்துச் சோராமற் றீராது. பின்னர், பிரம்மாத்திரப் படலத்திலும், மாய்ந்து கிடந்த அருமைத்தம்பி இலக்குவனைக் கண்டு அலறுகின்ற இவ்விராமன், "பொருந்தே னினிப் பொய்ப் பிறவிக்கும் பொறை யல்லேன்" என விளம்புவதும் இதனையே இவ்வண்ணமே வற்புறுத்துகின்றது. இவ்வுலக வாழ்க்கையின்கண் விளைகின்ற இன்னல் இடர்கள் கணக்கில. நோயால் மெலிதலும், இரப்போர்க் கொன்று ஈயமாட்டாத பின்னும் இறவாமல் உயிர் சுமந்து துவள்வதும், வறுமையின் கொடுமையால் காய்கின்ற வயிற்றோடு மானமும் மாய்ந்து தேய்தலும், அருமைக்குரிய உறவினர் நண்பர் முதலாயினோர் பிரியவும் உயிர் துறக்கவும் நேரிடுங்காலையில் கடுந்துயர் அடைவதும், அனைய இன்னல்கள் பலப்பல வந்து பற்றும்போது, மனிதன் என்ற மாமாயக்கூத்தன் ஒருகடவுளே, "வேண்டேன் இப்பிறவி...யான் பொறையல்லேன்" என்று அற்றங் காவாமல் இயம்பிவிடுவானாயின், இனி இம்மனிதப் பிறவியை உவந்தொருவர் உரைப்பதற்கென்னுளது? மனிதர் மனத்தினைத் தளர்த்துகின்ற எண்ணங்கள் இவை; ஆயினும் இராமன் துயர்கொண்டிழைக்கும் இம்மொழிகளினின்று மெய்ப்பிறவி வாய்த்த மனிதர் ஒரு சிறந்த பாடம் கற்றுக்கொள்ளலாம். தானே கடவுளாதலின் இராமன் தன் மானுடத் துன்பத்தைச் சார்த்திவிட்டு ஆறுதற்கு வேறோர் கடவுளின்மையால் இவ்வேழை இவ்வண்ணம் வருந்துதலன்றித் துணையொன்றும் இல்லாதவனா யிருக்கின்றான். மனிதர் விதி யெவ்வாறாயினும் அவர் கதி அவ்வாறு அன்றே. தம்முடைய துயர்களை யெல்லாம் கொண்டு போய்க் கொடுத்துவிட்டுக் களைப்பாற வோர் கடவுள் மனிதருக்கு உண்டு. "என்னுடையவைக ளல்ல இத் துன்பங்கள், எம்பெருமானே, நினதேயவை" எனச் சலிக்காத நம்பிக்கையுடன் மனிதர் அக்கடவுளின் தோள்களில் சுமக்கக் கற்று 'நான் நான்' என்னுந் தருக்கினை மறப்பார்களாயின், அக்கடவுள்தான், சுமத்தச் சுமத்தச் சுமக்கக் காத்திருக்கின்றான். சும்மாட்டை நம் தலையினின்று எடுத்துவிட நினையாதவரையிற்றான் துன்பப் பொதிகளும் இறக்கப்படுவதில்லை. இதனை யுணர்ந்தால், தனக்கோர் கடவுளில்லாமையால், "இப் பொய்ப் பிறவிக்கும் பொறை அல்லேன்" எனச் சுருண்ட அக்கடவுளிற்கு எதிராக, மனிதர் தமக்கொரு கடவுளுண்மையின் உறுதியால், "இம் மெய்ப் பிறவிக்கும் பொறை வல்லேன்" என நிமிர்ந்துபேசும் வீரர்க ளாவார் என்பதில் ஏதேனும் ஐயமுளதோ. கடவுளில்லாக் கடவுளின்கதியாவதாயினும் ஆகுக, கடவுளைஉடைய மனிதர்வருந்தினால்அதுவரு

ந்துவார் பிழை. "வேறொன்றும் நீ என்பொருட்டுத் தியாகம்செய்யவேண்டா. உனக்கு வருந் துன்பங்களையேனும் உன் உடைமையாக மார்புறத்தழுவிப் பற்றிக் கொள்ளாமல் எனக்குக் கொடுத்துவிடு—பின் துயர் துடைத்தாய்" என்னும் உறுதியைக்கடவுள் மதங்கள் எல்லாவற்றின் வாயிலாகவும் விளம்புகின்ற செய்தி புதுமையன்று. எனினும், ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தம்துயரம் வைத்துழலும் புன்கணவர்! வைத்துழல்வதன்றி இராமன் வேறுநெறி பெற்றிலனாதலின் பின்னும் புலம்புவான்—

என்னுரம் பற்றுண்ண வேன்றுயைச் சான்றோயைக்
கொன்றுனு நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்றாட் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போ னின்றேனே.

[என் மனைவி ஒருவனால் பிடிபட, அவளை மீட்டதற்கு எதிர்த்த பெருந்தகையாகிய உன்னைக் கொன்றவனும் உயிரோடு நிற்கின்றான், நீயோ கொலையுண்டு கிடக்கின்றாய். வலிய தாளினையுடைய வில்லையேந்தி அம்புகளின் கற்றையைச் சுமந்துநிற்கின்ற நானும் இப்பழியைத் தீர்க்காமல் நெடுமரம்போல் நிற்கின்றேன்]

சொல்லுடையா ரென்போ லினியுளரோ தொல்வினை
இல்லுடையாள் காண விறகுடையா யெண்ணிலாப்
பல்லுடையா யுன்னைப் படையுடையான் கொன்றகல
வில்லுடையே னின்றேன் விறலுடையே னல்லேனே [யேன்

[வீண் வார்த்தைகள் வளர்ப்பதில் எனக்கு நிகரானவர் பிறர் உளரோ! சிறகுகள் உடையவனே, கணக்கில்லாத பற்களையுடையவனே, பழைய தீ வினையையுடைய என்னுடையமனைவி காணும்படி உன்னை, படைக்கலன்களையுடைய பகைவன் கொன்றுவிட்டுச் செல்ல, என் வில்லை வீணே சுமந்துநிற்கின்ற நான் ஆற்றல் அதிகந்தான்உடையேன் அல்லனோ]

மூர்ச்சனை யடைந்திருந்த சடாயு, புலம்பிய இராமன் மொழிகளாற் சிறிது உணர்வுபெற்றுக் கொற்றவனைக் காண்டலுமே, தன் உள்ளங் குளிர்ந்து, இற்ற சிறகும் இன்னுயிரும் ஏழுலகும் பெற்றனன் ஒத்து, 'பெயர்த்தேன் பழியென்று' கருதி,

பாக்கியத்தா லின்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்மி
தாக்கி யரக்கன் மகுடத் தலைதுமித்த [னென்று
மூக்கினு லுச்சி முறைமுறையே மோக்கின்றான்

["புண்ணிய புருடர்களே, பயனற்ற எனது பழியுடைய உடலினை இப்பொழுது விட்டுவிடுகின்ற நான் என் பாக்கியத்தால் உங்களைப் பார்க்கப்பெற்றேன், வாருங்கள்," என்று வரவுகூறி, இராவணனை எதிர்த்து அவன் தலைகளிலிருந்த கிரீடங்களை வீழ்த்திய தன்மூக்கினால் அவர் உச்சியை முறைமுறை மோந்தனன்]

மோந்து பின், அரக்கன்செய்த வஞ்சனை முற்றும் வண்ணம் இவ்விரு வீரரும் எங்ஙனம் சீதையைத் தனிவிட்டுச் செல்ல நேர்ந்தனர் என்று சடாயு வியத்தலும், இலக்குவன் புகுந்தனவனைத்தும் எடுத்தியம்பினன். இனி, இதனைக் கேட்ட சடாயு, இம்மைந்தர் உற்ற துயரத்தைத் தேற்றுதல் நன்றெனச் சிற்சில அறிவுசால் உரைகள் ஓதுவானாயினன். இலக்குவனை இராமனுக்கு அறிவுறுத்தித் தேற்றினனென வான்மீகம் கூறுகின்றது. இராமன் இலக்குவன் ஆகிய அவ்விருவரும் தேற்றற் குரியராய்த்துயர்மலிந்து நிற்க அவர்களில் ஒருவன் மற்றவனை ஆற்றப் புகுந்தா னென்பதிலும் இவ்விருவரையுமே அவர் தாதையன்ன சடாயு தேற்ற முயன்றனன் என்னல் பொருத்த முடைமையில் ஓரளவு உயர்ந்ததாகும். பேசினோர் முறைமையால் மாத்திரமன்றிப் பேசிய மொழிகளின் பெற்றியாலும் இவ்விரு நூல்களுக்கும் வேற்றுமை யுளது. இளையோன் இலக்குவன் அவ் வடநூலில் மொழிகின்றான்—

"ஒ காகுத்த, தாங்களே இந்தத் துன்பத்தைச் சகிக்கிராயின் அறிவிலிகள் வேறு யார் சகிக்கவல்லார்? ஓ புருஷோத்தம, துன்பந் தணிவீராக. துன்பம் ஒவ்வொருவரையும் பற்றுமேனும் கணத்தில்அழிந்துபோம். இது உலகத்தின்சுபாவம். நகுஷமகாராஜாவின்குமாரராகிய யயாதி என்பவர் தேவபதவியை அடைந்தும் தவறுசெய்தபடியால் அதை இழந்துவிட்டார். நமது தந்தையின் புரோகிதரான வசிஷ்டமுனிவருடைய குமாரர்கள் நூற்றுவரும் ஒரேநாளில் மாண்டுபோனார்கள். எல்லாப் பிராணிகளுக்குந் தாயாகிய இந்தப் பூமிதேவிக்கும் நடுங்குதல் துன்பம் உண்டாகின்றது. உலகத்திற்கு இரு கண்களாக விளங்குபவர்களும் சர்வ வஸ்துக்களுக்கும் காரணமா யுள்ளவர்களும், மகா பலசாலிகளுமாகிய சந்திர சூரியர்களுக்கும் கிரகண துன்பம்நேரிடுகின்றது. பெரிய பூதங்களுக்கும் தேவர்களுக்குங்கூடத் தெய்வத்தைக் கடக்கமுடியாது. இந்திரன் முதலான தேவர்களுக்கும் சுகமும் துக்கமும் உண்டென்று நான் கேள்விப்பட்டுள்ளேன். ஆகையால் தாங்கள் இவ்வாறு துயரப்படுவது சரியன்று. சீதை இறக்கின் என், பிறரால் கவரப்படின் என், தாங்கள் அதற்காக ஏழைபோலப் புலம்புவது தக்கதன்று. உண்மை ஞானிகள் எவ்வகைத் துன்பம் நேரிடினும் அசையார்கள். ஆகையால், உத்தமரே தக்கது யாதென்றுஆராய்ந்து அறிக. தங்களைப்போன்ற பேரறிவுடையவர்கள் தங்கள் அறிவினாலேயே நன்மை தீமைகளை நன்கு பகுத்தறிகின்றார்கள். பலன் அறியப்படாதனவும் முடிவு தெரியாதனவுமான காரியங்கள் முயற்சிஇன்றி முற்றுப்பெற மாட்டா. தாங்களே இன்னவைகளை எனக்கு எத்தனையோதரம் சொல்லியிருக்கின்றீர்கள். பிரகஸ்பதிக்குஒப்பான அறிவுள்ள தங்களுக்கு யாரால் புத்திசொல்ல முடியும்? தங்களுடைய புத்தியைத் தேவர்களாலும் அளவிட முடியாது. அவ்விதமான புத்தி இப்பொழுது துக்கத்தால் சோர்ந்து தூங்குகின்றது, நான் அதைத் துயிலுணர்த்துகின்றேன்"

எல்லாருக்கும் எல்லாம் எப்பொழுதும் சொல்லவல்ல அறிவுரைகள் உதாரணங்களுடன் உரைத்தனன் இலக்குவன். "எத்தகையினோரையும் விதியானது தொடரும் ஆற்றலுடையது, அதனைக் கடத்தலென்பது எவருக்கும்இயலாது. ஆதலின் உன்னுடைய துயரத்தைக் குறித்து நீ கவலாதே" என்னு மிதனில் எத்துணைப் புதுமை யில்லையோ அத்துணைப் பயனுமில்லை. விதியின்வாய்ப் படாதவரும், பட்டக்கால் விலக்க வல்லவரும் யாவரும் இல்லை, இது "சாதாரணம்" என்றவோர் பொதுதர்மத்தைப் புகல்வதாலும் கேட்பதாலும் நினைப்பதாலும் ஒருவன் தான் உற்ற தனித்துன்பத்தை ஆற்றிக்கொள்வது எங்ஙனம்! மரணமும் அன்னதே; எல்லாரும் இறப்பவரே என்ற எண்ணத்தில், தனக்கு அருமையானவரை இழந்த துன்பத்தைத் துறக்க வொண்ணுமோ. ஷேக்ஸ்ப்பியரின் 'ஹாம்லட்' என்னும் நாடகத்தில் வருகின்ற கெர்ட்ரூட் என்னும் அரசி தன் நாயகன் இறந்த மாதமொரு மூன்று ஆதற்குள் அந்நாயகனைக் கொன்ற அவன் தம்பி க்ளாடியஸ் என்பவனை மணம்புரிந்துகொண்

டனள். இவை நிகழ்ந்த சிறிதுகாலத்திற்குப் பின்னர் அவள் மைந்தன், இள ஹாம்லெட், கல்வியின் நிமித்தமாகத் தான்சென்றிருந்த வேற்றூரினின்று திரும்பி வந்து, இழந்த தன் தந்தையை நினைத்து நினைத்துத் தாங்கவொண்ணுத் துயர்கூர்வா னாயினன். அன்னவனை அவன் அன்னை தேற்றமுயன்ற வாசகம் ஒன்று இருந்த வண்ணமும், அதற்கு இள ஹாம்லெட் கூறிய மாற்றமும் இங்கு நினைவின்கண் வரற்குரியன—

Queen:—Good Hamlet, cast thy nighted colour off
And let thine eye look like a friend on Denmark
Do not for ever with thy vailed lids
Seek for thy noble father in the dust
Thow know'st it is common—all that live
must die,
Passing through nature to eternity.
Hamlet:—Ay, madam, it is common.

"இருப்பன வெல்லாம் இறத்தல் வேண்டும், இது சாதாரணம்; மற்று, நீயோ உன் தந்தையைக் குறித்து மாழ்குவானேன்" என்றாள், தன் புருடனைக் கொன்றவனை மணந்திருக்கும் ஓர் அன்னை. அதற்கு அவள் மைந்தன், "ஆம், அம்மா, அது சர்வ சாதாரணமே' என்று ஆமோதித்துரைத்த சொற்களில் அடங்கிய வெம்மை, அவன் துயரம் ஆறினும், ஆறமாட்டாது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[685-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 10-ம் தசகம்
1-ம் பாசுரம்.

பிறந்தவாறும்வளர்ந்தவாறும்பெரியபாரதங்கைசெய் [தைவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச்செய்துபோனமாயங்களும்
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண் [கின்றவிச்
சிறந்தவான்சுடரேயுன்னையென்றுகொல்சேர்வதுவே.

அவதாரிகை:—சென்ற தசகங்களில், ஆழ்வார் ஆங்காங்குத் திவ்விய தேசங்களில் உள்ள எம்பெருமானை சேவித்துத் தன் மனதார அவனுடைய அனுக்கிரஹத்தைப் பெறலாமென்று முயற்சித்தவர், தம் மானஸானுபவந்தவிர எந்த விடத்திலும் வேறு ஸம்பவம் கிடைக்காமற் போகவே, திவ்விய தேசங்களிற் காட்டிலும் அவனது அவதார விசேஷங்களின் அநுஸந்தானத்தால் தனக்கு விசேஷ கடாக்ஷம் கிடைக்கலாமென்று உத்தேசித்து அவ் வவதாரவிசேஷங்களில் இறங்கி அவற்றின் விசித்திரங்களில் ஈடுபாடுபெறலாமென்று பிரவர்த்திக்கவும், அவ்வண்ணம் கைகூடிவாராமையால் கிலேசப்படுகிறார். இந்தத் தசகம் நம் ஆழ்வாரின் இம் மனோநிலையை விவரமாய் விஸ்தரிக்கின்றது.

பொழிப்புரை:—மற்ற மானிட ஜந்மங்களைப்போல் பூர்வகர்ம வசமாய் ஜந்மம் எடுக்காமல் தன் ஆச்ரிதர்களின் ரக்ஷணத்தின்பொருட்டு உலகத்திலே வந்து அவதரித்து, விசித்திர சகடாஸுர யமரார்ச்சன வதம் முதலிய திவ்யசரித்திரங்களை இயற்றியதும், பெரிய பாரதப்போரில் சேனையை அணிவகுத்துத் தன்னை ஆச்ரயித்தவர்களுக்குத் தூதனும் தேர்ப்பாகனுகவும் உதவிசெய்து தன் ஸௌலப்பியத்தை உலகமறியக் காட்டியிட்டுப் பிறகு உன் மஹிமையை அறியமாட்டாத உலகத்தாரை விட்டுத் தன்னடிச் சோதிக்கே எழுந்தருளின ஆச்சரியங்களும் அடியேனுடைய மர்மத்திலே புகுந்து என் மனதைவிட் டகலாமல் நின்று என்னுவியை உருக்கிக் உண்கின்றன. உன்னை அடைவது என்றைக்கோ, வர்ணிக்க முடியாத உன் சிறந்த அழகை எப்போது நிரந்தரமாய் அநுபவிப்பேனே—என்கிறார்.

குறிப்பு:-I இவ்வாழ்வார் ஆசைப்பட்ட ஸம்பவம், தன்னைப் பகவான் கண்குளிரக் கடாக்ஷம் செய்தல், ஒரு மொழிகூறுதல் தழுவுதல் முதலாய இந்திரியங்களின் அநுபவம். இந்த மனோரதங்கள் அர்ச்சாவதாரத்தில் ஸம்பவியாதென்பதை உணர்ந்து, கீழ்ச்சென்ற கிருஷ்ணாவதார சரித்திரத்தின் திவ்விய லீலைகளில் தமது திருவுள்ளத்தைச் செலுத்தி அநுபவிக்கின்ற வகை இது மேற்சொன்ன மனோரதத்தின் ஏகதேசம் என்பது கருத்து.

குறிப்பு:-II. கிருஷ்ணாவதாரம், ஸ்ரீராமாவதாரம் இரண்டிலும் மற்ற மானிட சிசுக்கள்போல் ஜனனம் செய்யாதிருக்கவும், அவைகளைப்பற்றிப் "பிறந்தவாறும்" என்றுவர்ணிக்கக்கூடுமோவென்றால்—பிறப்புப்போல அல்லாமல்தோன்றி ஆவிர்ப்பவித்தாலும் ஸ்ரீராமாவதாரத்தில் 12 மாதம் தாயின் கர்ப்பாஸயத்தில் இருந்ததைப்பற்றியும், கௌசல்யா தேவியிடத்தில் முலையுண்ணுவிடில் அவள் நோவுபட்டதாலும், கட்டவும் பிடிக்கவும்ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் யசோதைப் பிராட்டியாரிடத்தில் விளையாட்டான பல லீலைகளை நடத்தினபடியாலும் "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று வர்ணிக்கக் கூடுமென்பது தாத்பரியம்.

III குறிப்பு:-"இச்சிறந்த வான்சுடரே" என்றுகுறிப்பதினால் கிருஷ்ணாவதார விக்கிரஹம் ஆழ்வார் கண்களுக்குத் தத்காலம் காண்பது போல் "இ-இந்த" அதாவது கண்களின் முன்னால் கிட்ட இருக்கிற உன்னதமான காந்தியை உடையவனே! என்று விளக்கினார் - கிருஷ்ணாவதாரம் நெடுங்காலத்திற்கு முன்னமேயா யிருந்தபோதிலும் ஆழ்வார் கண்களுக்கு ஸமகாலமாய் இருப்பதுபோல்தோற்றி அநுபவத்திற்குப் புலப்படுகையால் இப்படி ஊஹிக்க வேண்டும்.

பதக்குறிப்புக்கள்:—நிறந்தனூடு - நிறம் - தன் - ஊடு - நிறம் - வஸ்து தத்துவம் - ஸூக்ஷமம் - மர்மம். தன் சாரியை. ஊடு-அகத்தில்-மர்மத்தினுடையமர்மத்தில்.

விசேஷக் குறிப்பு:—இப்பாசுரத்தின்கீழ்க் குறிக்கப்பாலது ஒரு ஐதீகம் உண்டு. ஆழ்வார் இப்பாசுரத்தை அநுஸந்தானம்செய்கையில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திலும் அதனில் நடத்தியருளிய திவ்விய சேஷ்டைகளிலும் ஈடுபட்டு ஆறுமாஸ காலம் மோஹித்துக் கிடந்தார் என்பர். "வீடுமின் முற்றவும்" என்றமுதற்பத்து இரண்டாவது தசகத்தில் பிறரைக் குறித்து ஆழ்வார் பகவானைப் பஜியுங்கோ ளென்று பரோபதேசம் செய்ததில், லௌகீக விஷயங்களில் பற்றுவிட்டால்தான்

அவன் விஷயத்தில் பக்தி உண்டாகுமென்று கற்பித்தார்—உலக விஷயங்களில் வைராக்கியம் வரவேணுமென்ருல் எம்பெருமானுடைய திவ்விய அழகைக் கண்ணுல் கண்டாலல்லது பிறவாது. இப்படிக் காண்பதும்ஐம்புலன்களை யோகாப்பியாஸத்தால் திருத்தின மனதை நிலைநிறுத்திய தபசுஉடையவர்களுக்கும் சுலபமன்றென்றும் ஆழ்வார் தாமே ஒன்ரும் தசகத்தில் "மனனகம்" என்ற இரண்டாம் பாட்டிலேயெ அறுதியிட்டார். இப்படியாஞல் எம்பெருமானை உலகத்தார் இழந்துபோ மத்தனையேயன்ரே வென்று ஆழ்வார் தாமே ஆசங்கைப்பட்டு 1-ம் பத்து மூன்ரும் தசகத்தில், தன்னைக் காணவேண்டுமென்ற ஆவலுடையவருக்குக் காணலாம்படி அவன் சுலபனென்றும் எளியனென்றும் கற்பிக்கத்துடங்கி முதல் பாசுரத்திலேயே "மத்துறு கடைவெண்ணெய்க் களவினி லுரலிடையாப்புண் டெத்திற முரலிேஞடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே'' என்று பாடிஞர். அதாவது. இடைக்குலத்தில் வந்து பிறந்து மானிடரோடு கலந்ததொன்றே போதாதோ? வெண்ணெயைத் திருடி அமுது செய்து அக்குற்றத்திற்காக உரலோடு தாயிஞல் சிறு தாம்பிஞல் கட்டுண்டு பயந்து ஏங்கி நடுங்க வேண்டுமோ, பிரானே-என்று அநுஸந்தித்தவாறே இவ்வநுபவத்தில் ஆறுமாசம் மோஹித்துக் கிடந்தார் என்று மற்ரெரு ஐதீகமாம்—இதைப்பற்றி அவ்விடத்தில் யாம் குறித்துளோம்.

2-ம் பாசுரம்.

வதுவைவார்த்தையுளே றுபாய்ந்தது
மாயமாவினைவாய்பிளந்தது
மதுவைவார்குழலார்குரவை
பிணைந்தகுழகுமதுவிது
வுதுவென்னலாவன வல்ல
வென்னையுன்செய்கைநைவிக்கு
முதுவையமுதல்வாயுன்னை
யென்றுதலைப்பெய்வனே.

அவதாரிகை:—சென்றபாசுரத்தில் பகவான்கிருஷ்ணுவதாரத்தில் செய்த திவ்வியசேஷ்டைகளில் ஈடுபட்டுப் பகவானின் வடிவழகைக் காணவேண்டு மென்று ஆசைப்பட்டார். இப்பாசுரத்தில் பகவானை என்று தலைப்பெய்வேன். அதாவது "காணுவேன்'' என்கிருர். தான் இறந்துபட்டு வைகுண்டஞ் சென்று காணவேணு மென்று தாத்பரியமல்ல. தம்திருவுள்ளத்தால் ஸ்ரீகிருஷ்ணபகவானின் சேஷ்டைகளை ஒன்று ஒன்ருய்க் கவலைபாயாமல் மனமார ஊன்றி ஒவ்வொன்றின் ரஸத்தையும் நிதானமாய் உட்கொண்டுகிரஹிக்க வேணுமென்று திருவுள்ளம்.

பதக்குறிப்புக்கள்:-வதுவை வார்த்தை-ஸ்ரீநந்தகோபன் தன் பெண்ணுகிய நீளாப்பிராட்டியாரை, அவிழ்த்துவிட்ட ஏழு காளைகளை அடர்த்து எவன் ஒருவன் ஜெயிக்கின்ருனே அவனுக்கு மணம் செய்துகொடுப்பதாக ஏற்படுத்திய தீர்மானம். உள் - இத்தீர்மானத்தைப்பிரசுரப்படுத்திய உடனே க்ஷணம்கூடத் தாமதமில்லாமல். மாயமா-குதிரைபோல் உருவமெடுத்துஸ்ரீகிருஷ்ணபகவானைக் கடித்துக் கொல்ல வாய்திறந்துகொண்டு வந்த அசுரன் பல்லால் கடிக்கத் திறந்த வாயைக்கிழித்து அசுரனைக் கொன்றதை அநுஸந்திக்கிறபடி. குழந்தை விளையாட்டாய்ச் செய்தருளியதைப் பற்றி விஸ்மயமும் இவ்வநுபவம் கலக்கமில்லாமல் தமக்குக் கிடைக்கவில்லையேஎன்ற வியாஸங்மும் தோற்ற அருளிச்செய்கின்ருர். குரவைபிணைந்த குழகும் - வட்டமாய் ராஸமண்டலகிரீடையில் கோபிமார்களுடன் ஒரேசேர்ச்சிபோல் ஏகரஸமாய் ஆடியஅழகும். அது இது உது என்னலாவன அல்ல- அது-குதிரை வடிவமெடுத்த அசுரனைக் கொன்றது. கிருஷ்ணுவதாரத்தில் சிறுகுழந்தைப்பருவத்தில் வெகு காலத்துக்குமுன் நடந்தேறிய சரித்திரம்:—இது - ராஸக்கிரீடையில் நேசமான கோபிகளுடன் கலந்து ஆடியது-கண்ணுக்கு நேரில் நடப்பதுபோல் காணக்கூடிய தத்கால சரித்திரம்— உது - முதுவைய முதல்வா—வெகு காலத்திற்குமுன் அண்டங்களைச் சிருஷ்டித்து ஆக்கிய முழுமுதல் காரணமே! இது பழைய சரித்திரமானதாலும் இவ்வுபகாரத்தால் எல்லாருக்கும் பொதுவான ஸாமான்னிய லாபமானதாலும்விசேஷ அநுக்கிரஹம் வந்துவிட்டதாக யாவரும் மதிக்க மாட்டார்கள். ஆழ்வாருக்கோ இம்மூன்றும் ஒன்றுபோலே பொருள்பாடு உள்ளதாகவே கூறுகிருர்.

"This, that, and the other are all of equally absorbing interest to the seer and the poet'' says the text; to others this is of utmost interest, that of mild interest and the other of indifferent interest.

பொழிப்புரை:-விவாஹம் என்ற வார்த்தை பிறந்த உடனே ஏழு காளைகளைஜெயித்ததும், நிராயாஸஅசுரனை குதிரை வாயைப் பிளர்ந்ததும் தேன்பெருகும் கூந்தல்களையுடைய கோபிமாருடன் குரவையிலே கலந்து ஆடிய அழகும், இச்சரித்திரங்க ளெல்லாம் உன்னது ஆனபடியால் உன் குணங்களின் பிரசங்கத்திலே ஈடுபடும் என் மனதை மிகவும் நலிவிக்கின்றன - பிரளயத்தில் அழுந்திக் கிடந்த ஜகத்தை யுண்டாக்கிணுப் போலவே என்னை உன் குணங்களின் அநுஸந்தானத்தில் ஊன்றவைத்து அநுபவிக்க வல்லேனுகும்படி பண்ணவேண்டு மென்கிருர்.

விசேஷக் குறிப்பு:-"உன் செய்கை என்னை நைவிக்கும்'' என்று இப்பாசுரத்தில் கூறுவதே இத்தசகம் முழுவதும் பல்லவிபோல் தொடர்ந்து வருவது கவனிக்கத்தக்கது. ஒன்பதாம் பாசுரத்தில் "என்னெஞ்சம் கரைந்து உருகும்'' என்றும், 10-ம் பாசுரத்தில் "என்ஞவியை உருக்கிக்கொண்டு உன்னை நாடும்'' அதாவது "உன் லீலைகளைச் சிந்திக்கச் சிந்திக்க மனோபாவம் ஊன்றி நிரந்தரம் நிற்காமல் மறந்து திரும்பி அந்தச் சுகாநுபவத்தைத் தேடி நிற்கிறது'' என்றும் அருளிச்செய்வதின் தாத்பரியம்-பகவானுடன் கூட ஒருஸ்தான விசேஷத்தில் நின்று தாம் அவனை ஸதா ஸார்வ காலம் பார்த்திருந்தா லொழியத் தன் வேட்கைக்கு முடிவு இல்லை என்ற கருத்திஞல் இப்படி ஆழ்வார் அலற்றுகிறபடி-இதுவே பக்தியோகத்தின் முடிவில் ஏற்படும் கடைசி அவஸ்த்தை.

கலித்தொகை

[687-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 27.

இளவேனிற்கால வரவின்கண் ஆற்ருத தலைவி தலைவன்பால் தூது விடக் கருதிஞள். அதற்குத் தோழி, "ஆயிழாய், நம் தலைவர் நம்மைக்காட்டிலும் பிரிந்து உறையும் ஆற்றல் இல்லாதவர்; விரைவில் வந்துவிடுவர். இனி நீ வருந்தாதே'' எனக் கூறி வற்புறுத்தியதைக் கூறுவது இச்செய்யுள்.

பாடல்சால் சிறப்பிற் சினையவுஞ் சுனையவு [போற்
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாங் கொடுப்ப
ருேடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கட்
டோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்
செய்யவ ளணியகலத் தாரமொ டணிகொள்பு
தொய்யகந் தாழ்ந்த கதுப்புப்போற் றுவர்மணல்
வையைவா ரவிரற லிடைபோழும் பொழுதிஞன்

விரிந்தாறு மலராயின் விளித்தாலுங் குயிலாயிற்
பிரிந்துள்ளா ரவராயிற் பேதுறாஉம் பொழுதாயி
னரும்பட ரவலநோ யாற்றுவ ளென்ஞது
வருந்தநோய் மிகுமாயின்வணங்கிறையளியென்னே

புதலவை மலராயிற் பொங்கரின வண்டாயி
னயலதை யலராயி னகன்றுள்ளா ரவராயின்
மதலையி னெஞ்சொடு மதனில ளென்ஞது
நுதலூரும் பசப்பாயி னுணங்கிறை யளியென்னே

தோயின வறலாயிற் சுரும்பார்க்குஞ் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளா ரவராயிற்
பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது
பாயனேப் மிகுமாயிற் பைந்தொடி யளியென்னே
எனவாங்கு
ஆயிழா யாங்கன முரையாதி சேயார்க்கு
நாந்தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினுந்
தாம்பிரிந் துறைத லாற்றலர்
பரிந்தெவன் செய்தி வருகுவர் விரைந்தே.

(தரவு)

(வரி. 1 - 7) பாடல்சால் சிறப்பின்-(புலவர்) பாடலைப் பெறுதற்கு அமைந்த சிறப்பினையுடைய, சினையவும் சுனையவும் - கொம்புகளில் உள்ள பூக்களும் சுனைகளில் உள்ள பூச்களும், நாடினர் கொயல் வேண்டா-தம்மைவிரும்பினவர் வருந்திப் பறித்தலை வேண்டாவாகி, நயந்து தாம் கொடுப்ப போல் - விரும்பித் தம்மைத் தாமே கொடுப்பன போல, தோடு அவிழ் கமழ் கண்ணி தையுபு-இதழ் விரிகின்ற வாசனை வீசுகின்ற மாலையைக் கட்டி, புனைவார்கண் - அணிகின்ற மகளிரிடத்தில், தோடுஉற தாழ்ந்து - கொத்தாகப் பூமியைத் தொடும்படி தாழ்ந்து, துறை துறை கவின்பெற - துறைகள் எல்லாம் அழகு பெறும்படி, செய்யவள் அணி அகலத்து - திருமகளது அழகிய மார்பிடத்துள்ள, ஆரமொடு அணி கொள்பு - முத்தாரத்தோடு அழகிஞல் ஒப்பாகும் தன்மையைக் கொண்டு, தொய்யகம் தாழ்ந்த-(சிவந்த) தலைக்கோலம் நடுவே தங்கின, கதுப்பு போல - கூந்தலைப் போல, துவர் மணல், (சில இடங்களில்) சிவந்த மணலையுடைய, வையை வார் அவிர் அறலிடை - வைகையின் நீண்ட விளங்குகின்ற கருமணலின் இடையே, போழும் - நீரானது பிளந்து செல்கின்ற, பொழுதிஞன் - இளவேனிற் காலத்தே,

'துறை துறை' என்னும் அடுக்குப் பன்மைக்கண் வந்தது.

ஆற்றிற்குத் திருமகளின் முத்தாரம் உவமை.
பொழுதிஞன்-உருபு மயக்கம்.

(தாழிசை)

(வரி. 8 - 11) மலர் விரிந்து ஆறு ஆயின் - மலர்கள் மலர்ந்து ஒழியாதிருக்குமாஞல், குயில் விளித்து ஆலும் ஆயின் - குயில்கள் தம் பேடையை அழைத்துக் கூவுமாஞல், அவர் பிரிந்து உள்ளார் ஆயின் - நம் தலைவர் நம்மைப் பிரிந்து நினையாராஞல், பேது உறாஉம் பொழுது ஆயின் - (இது) மயக்கம் உறுத்தும் காலமாயிருக்குமாஞல், அரும் படர் - பொறுத்தற்கரிய நினைவையுடைய, அலைம் நோய் - துன்பத்தைச் செய்யும் காம நோய்க்கு, ஆற்றுவள் என்ஞது - இவள் ஆற்றி இருப்பள் என்று நீ கருதாமல் (இவள் இறந்துவிடுவள்) என்று எண்ணி, வருந்த நோய் மிகும் ஆயின் - நீ வருந்தும்படி என் காம நோய் மிகுமாஞல், வணங்கு இறை - வளைந்த சந்தினையுடைய முன் கையாளே! அளி என் - (அவர் வந்து நம்மாட்டுச் செய்யும்) அன்பு என்ன பயன் தரும்!

189162

ஓ - அசை.

(வரி. 12 - 15) மலர் புதலவை ஆயின் - மலர்கள் புதரிடத்தனவாஞல், வண்டு பொங்கரின ஆயின் - வண்டுகள் சோலை இடத்தனவாஞல், அலர் அயலதை ஆயின்- அலர் அயல்மகளிர் இடத்ததாஞல், அவர் அகன்று உள்ளார்ஆயின்-அவர் நம்மைப்பிரிந்துநினையாராஞல், மதலை இல் நெஞ்சொடு -(இவள்) ஒரு பற்றுக்கோடும் இல்லாத நெஞ்சத்துடன், மதன் இலள் என்ஞது - வலி இல்லாதவள் என்று கருதாமல், பசப்பு நுதல் ஊரும் ஆயின்- பசலை நிறம் என் நெற்றியிலே பரவுமாஞல், நுணங்கு இறை - நுண்மையான சந்தினை உடைய முன்கையாளே, அளி என் - அவர் வந்து நம்மாட்டுச் செய்யும் அன்பு என்ன பயன் தரும்!

(வரி. 16 - 19) அறல் - (அரித்து ஒழுகுகின்ற) நீர்கள், தோயின ஆயின் - தேங்கி நின்றனவாஞல், சினை-கொம்புகளிலே; சுரும்பு ஆர்க்கும் ஆயின் - வண்டுகள் ஆரவாரிக்குமாஞல், தளிர் - தளிர்கள், மாவின ஆயின்-மாமரத்திடத்தனவாஞல், அவர் மறந்துள்ளார் ஆயின் - நம் தலைவராய அவர் நம்மை மறந்துள்ளாராஞல், பூ எழில் இழந்த கண் - பூவினது அழகை இழந்த கண்கள், புலம்பு கொண்டு - தனிமைகொண்டு, பாயல் அமையாது - தூக்கம் பொருந்தாமல், நோய் மிகும் ஆயின்-நோய் அதிகப்படுமாஞல், பைந்தொடி - பசிய வளையலை உடையாய், அளி என்-அவர் வந்து நம்மாட்டுச் செய்யும் அன்பு என்ன பயன் தரும்!

(தனிச்சொல்)

என - என்று, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 21 - 24) ஆயிழாய்-ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடையவளே, ஆங்கனம் உரையாதி-அங்ஙனம்சொல்லாதே, சேயார்க்கு - தூரத்திலிருக்கின்ற நம் தலைவர்க்கு, நாம் தூது மொழிந்தனம் விடல் வேண்டா - நாம் தூது மொழிந்து விடுதல் வேண்டா, நம்மினும் தாம் பிரிந்து உறைதல் ஆற்றலர் - நம்மைக்காட்டிலும் அவர் இக்காலத்திற் பிரிந்து இருத்தலை ஆற்ருராய், விரைந்து வருகுவர் - விரைந்து வருவார், பரிந்து எவன் செய்தி - (அதஞல்) நீ வருந்தி என்ன காரியம் செய்கிருய் ?

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்க 4. களம் 1.

[689-வது பக்கத் தொடர்ச்சி]

[பகட்டுடைய ஆடைகளைச் சுமந்துகொண்டு ஏரியல் வருகின்றது]

ப்ராஸ்ப்பீரோ:—வா, அவைகளை இந்தக் கொடியில் தொங்கவிடு. (1).

[ப்ராஸ்ப்பீரோவும் ஏரியலும் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கின்றனர். காலிபன்னும் ஸ்ட்டிபானோவும் ட்ரின்குலோவும் முழுவதும் நனைந்த வண்ணமாய் வருகின்றனர்.]

காலிபன்:—வேண்டிக் கொள்கின்றேன், மெல்ல மிதி; இந்தக் குருட்டெலி காலடிச் சத்தமொன்றுங் கேட்கலாகாது: அவன் குகைக்கருகு இப்பொழுது இருக்கின்றோம் நாம் (2).

ஸ்ட்டிபானோ:—ஏ, விரூபியே, பொல்லாங்கு செய்யாத மோகினி என்று நீ சொல்கின்ற அந்த மோகினி, நம்மை விஷம ஆட்டம் ஆட்டிவைத்திருப்பதன்றி வேறொன்றும் நல்லது செய்யவில்லை (3). சொல்வது கேள் குரூபியே, உன்மீது அதிருப்தி கொள்ள நேர்வேனானால், பார் நீ—

ட்ரின்குலோ:—தொலைந்த வோர் விரூபிதான் (4).

காலிபன்:—நல்லவென் பிரபுவே, உன் தயவை இன்னமும் எனக்கு அளித்திடுக. பொறுமையா யிரு, ஏனெனில், நானுன்னைச் சேர்ப்பிக்கும் பரிசில் இந்தக் கஷ்டத்தின் கண்களைப் பொத்திவிடும். (5) ஆதலின், மெல்லப்பேசு. எல்லாம் நள்ளிரவென்ன நிச்சப்தமா யிருக்கின்றது.

ட்ரின்குலோ:—இருக்கட்டும், நம் புட்டிகளை அக்குட்டையில் இழப்பதா—(6)

ஸ்ட்டிப்பானோ:—அபகீர்த்தியும் அவமானமும்மாத்திரமன்றி, ஏ விரூபியே, அதனில் அளவற்ற நஷ்டமும் உளது. (7)

ட்ரின்குலோ:—நான் நனைந்ததைவிட அதுதான் எனக்கு அதிகம். மற்று, விரூபி, உன் பொல்லாங் கில்லாத மோகினி இது (8).

ஸ்ட்டிபானோ:—இக்காரியம் என் காதிற்கு மேலாவதானாலும் போய் நான் புட்டியை எடுத்துவந்துவிடுவேன் (9)

காலிபன்:—வேண்டிக்கொள்கின்றேன், என் அரசே, சும்மா விரு. இதோ பார்க்கின்றாயே, இதுதான் குகையின் வாய்: அரவஞ் செய்யாமல் உள்ளே செல். என்றென்றும் இத்தீவை உனக்கும், உன்னுடைய காலிபனாகிய என்னை என்றென்றும் உன் கால்நக்கியும் ஆக்கவல்ல அந் நல்லவொரு தீங்கினைச்செய்துவிடு (10).

ஸ்ட்டிபானோ:—கொடு உன் கையை. இரத்தம் பெருகும் கருத்துக்கள் கொள்ள நான் தலைப்பட்டுவிட்டேன் (11).

டரின்குலோ:—ஹா! ஸ்ட்டிபானோ மன்னவா! ஓ பிரபுவே! ஓ தகவோய்! ஸ்ட்டிபானோ! என்ன வென்ன ஆடைகள் உனக் கிங்கே இருக்கின்றன, பார்!

(1) ப்ராஸ்ப்பீரோ சொல்லியபடி ஏரியல் குகைக்குள்ளிருந்து சில பளபளப்பான ஆடைகளைக்கொணர, அவைகளை அங்குள்ள கொடியில் தொங்கவிடும்படிசெய்கிறான்.

(2) குருட்டெலி என்று ப்ராஸ்ப்பீரோவைக் குறித்துக் கூறுகின்றான். எலி, வளைக்குள் இருப்பதுபோல் இவன் குகைக்குள் இருக்கின்றான் என்பது கருத்து. இருட்டிலிருப்பதால் குருட்டெலி என்கின்றான். எலிகளுக்குச் செவிப்புலன் மிகவும் நுட்பமாகையால், 'மெல்ல மிதித்து நட' என்று சொல்வது பொருந்துகின்றது.

(3) மோகினி என்பது பேய்வகைகளில்ஒன்று. "உவப்பித்தே ஊறுசெய்யா ஒலிகளும் இனிய இசைகளும் உள" (அங்கம் 3, களம் 2, பக்கம் 602) என்று முன் காலிபன் சொன்னதை ஒருவாறு நினைவில் வைத்திருந்த ஸ்ட்டிபானோ, "இங்குள்ள ஆவிகள் நமக்குத் தீங்கு ஒன்றும் ஒருபோதும் செய்யா என்று சொன்னாயே. மற்று பறையடித்துப் பாட்டுப்பாடி நம்மைக் கல்லிலும் முள்ளிலும் இழுத்துவந்து குட்டையில் அழுத்திய அந்த உன் பேய், இன்னபடி விஷமமாக நம்மைக் கஷ்டப்படுத்தியதன்றி வேறு என் ஒன்றும் நன்மை செய்யவில்லை" என்று கேட்கின்றான்.

(4) இப்படி நாங்கள் அல்லல்படுவதற்குக் காரணமாயிருந்தவன் நீதான் என்ற அதிருப்தி எனக்கு உன்மீது உண்டாகுமானால் பார்—என்று ஸ்ட்டிபானோ சொல்லி வருவதை, ட்ரின்குலோ, "நீ அப்புறம் தொலைந்தாய்" என்று முடிக்கின்றான்.

(5) இது பற்றி என்னை வெறுக்காதே. இன்னமும் என்பால் தயைவைத்து, இப்பொழுது நேர்ந்ததைப் பொறுத்துக்கொள். உனக்கு நான் அடைவிக்கப்போகின்ற வெகுமானத்தின் சிறப்பைக் கருதுங்கால் இந்தக் கஷ்டத்தை ஒரு கஷ்டமென்றே மதிக்கமாட்டாய்—என்பது பொருள். பரிசில் - வெகுமானம்,—தீவின் அரசும், மிராண்டாவை அரசியாகவும் பெறுவது. கஷ்டத்தின் கண்களைப் பொத்திவிடுதல் - (கண்ணைப் பொத்தல்-வஞ்சித்துவிடுதல்)—இந்தக் கஷ்டங்கள் இடையேவந்து உன் காரியத்தைக் கெடுக்கவேண்டு மென்று முயன்றன; எனினும் அக்கஷ்டங்களைப் பொறுப்பாயாயின், மிராண்டாவையும் அரசையும் நீ பெற்றபின், கஷ்டமானது தான் உன்னைத் தடுக்கமாட்டாமல்வீணானதுபற்றி வஞ்சிக்கப்பட்டதாகும் என்பது பொருள்.

(6) குட்டையில்விழுந்து இவர் இருவரும்உழன்ற போது சாராயபுட்டிகளை நழுவவிட்டு இழந்ததற்காக வருந்துகின்றனர்.

(7) அதனில் - சாராயபுட்டிகளை இழந்ததில்.

(8) அதுதான் அதிகம்-புட்டியை இழந்ததுதான் அதிகம் வருந்துதற் கிடமானது.

(9) மறுபடி நான் என் காதளவு சேற்றில் அழுந்தியாயினும் என் சாராயபுட்டியை அந்தக் குட்டையில் தேடிக் கொண்டுவரப் போகின்றேன்.

(10) நல்லதீங்கு-ப்ராஸ்ப்பீரோவைக் கொல்வது. அதனால் ஸ்ட்டிபானோவிற்கு நன்மையுண்டாகும் என்பது பற்றி 'நல்ல' தீங்கு என்கின்றான். கால்நக்கி-காலைநக்குபவன். இதனைச் செய்வாயாயின் நான் எந்நாளும் உன் கால்களை நக்கிக்கொண்டு கிடப்பேன்—என்பது பொருள். ப்ராஸ்ப்பீரோபோன்றவர்களைக் கொடியவர்களென்று அழித்துவிட்டு அவர்களுக்குப் பதிலாய் ஸ்ட்டிபானோ போன்ற இழிகுலக் கயவர்களைத் தலைவர்களாக்கி அவர்களுடைய கால்களை நக்கிக்கிடக்க முயல்வதுதான் "அடேயடெ விடுதலை, விடுதலை அடெயடெ" என்னும் முழக்கத்தின் பொருள் என்பதை ஷேக்ஸ்ப்பியர் இங்கு ஐயமறக் காட்டுகின்றார். ஸ்ட்டிபானோவின் நினைவெல்லாம் அந்தச் சாராயப்புட்டியிலேயே இருப்பது, இந்தத் தலைவர்களுடன் ஒப்புநோக்கத் தக்கது.

காலிபன்:—ஏ மூடா, விட்டுவிடு அதனை; வெறும் குப்பை அது.

டரின்குலோ:—ஓஹோ, விரூபியே, பழந்துணிக் கடையில் இருப்பதென்னென அறிவோம் யாம்—ஓ ஸ்ட்டிபானோ மன்னவா! (12)

ஸ்ட்டிபானோ:—கழற்றிவிடு அந்த அங்கியை, ட்ரின்குலோ. இக்கையின்மேல் ஆணை, நானே அந்த அங்கியை எடுத்துக்கொள்வேன் (13)

ட்ரின்குலோ:—என் அரசே அதனை எடுத்துக்கொள்ளட்டும் (14)

காலிபன்:—ஜலோதரம் முழுக்காதா இம்மூடனை (15)! இந்த அற்பப் பொதிமீது மதிமயங்கிக் கிடப்பதன் கருத்து யாது (16)? மேற்சென்று நாம் அந்தக் கொலையை முதலிற் செய்வோம். விழித்துக்கொள்வானாயின், கால் கட்டைவிரல் முதல் உச்சந்தலை வரையில் நம்முடைய தோல்களைக் கிள்ளிக் கிள்ளிச் செய்த இரணத்தால் மூடி நம்மையோர் அதிசயப்பண்டம் ஆக்கிவிடுவான் (17).

ஸ்ட்டிபானோ:—விரூபியே, நீ சும்மாவிரு—அம்மா, கொடியே என்சட்டை யல்லவா இது? இப்பொழுது சட்டை கோலின்கீழ் இருக்கின்றது. இப்பொழுது, சட்டையே உன்னைத் தூக்கினால் நீ மயிரை இழந்து மொட்டைச் சட்டையாய் முடிவாய் (18).

ட்ரின்குலோ:—செய், செய். கோலுந் தூக்குமாய்த் திருடுகின்றோம் நாம்; (19). பிரபுக்களுக்குத் தக்கதே அது (20).

ஸ்ட்டிபானோ:—இவ் விகடத்தின்பொருட்டு உனக்கோர் வந்தனம். இந்தா, அதற்காக ஒரு சால்வை. நான் இத்தேயத்தின் அரசனாயிருக்குமளவும் புலமையோ ஒருபோதும் பரிசில் பெறாமல் போகவேண்டா. "கோலுந்தூக்குமாய்த்திருடுதல்" மிகச்சிறந்ததோர் மண்டையின் குத்து இது. இந்தா, இன்னொரு சால்வை இதற்கு (21).

ட்ரின்குலோ:—விரூபியே, வா, உன் விரல்களில் சிறிது பசை பூசிக்கொண்டு மற்றவைகளை வாரிக்கொள் (22).

காலிபன்:—அவைகளில் ஒன்றும் எனக்கு வேண்டா. இதனால் காலத்தை இழந்துவிடுவோம். பின், எல்லோரும், நத்தைகளாகவேனும் இழிவுறத் தாழ்ந்தநெற்றிக் குரங்குகளாகவேனும் மாற்றப்படுவோம் (23).

ஸ்ட்டிபானோ:—விரூபியே, உன் விரலை வை. என் சாராயப்பீப்பா யிருக்குமிடத்திற்கு இவைகளைச் சுமந்துசெல்ல உதவிசெய். இல்லையேல், என் இராச்சியத்திலிருந்து உன்னைத் துரத்திவிடுவேன். சீ! போ! தூக்கு இதை.

ட்ரின்குலோ:—இதனையும்.

ஸ்ட்டிபானோ:—ஆம், இதனையும் (24).

[வேடர்கள் வருகின்ற அரவம் கேட்கின்றது. ஆவிகள் பல வேட்டை நாய்களின் வடிவங்கொண்டு வந்து அவர்களைத் துரத்துகின்றன. ப்ராஸ்ப்பீரோவும் ஏரியலும்அந்நாய்களை ஏவுகின்றனர்]

ப்ராஸ்ப்பீரோ:—ஹே, பர்வதம், ஹே!

ஏரியல்:—வெள்ளி, அதோ, வெள்ளி!

ப்ராஸ்ப்பீரோ:—மூர்க்கா, மூர்க்கா! அதோ! கொடியா, அதோ! கேள் கேள்! (25)

(11) 'கையைக் கொடு' என்று காலிபனது கைகளைக் குலுக்கி, நாம் எண்ணியபடி ப்ராஸ்ப்பீரோவைக் கொல்கின்ற எண்ணங்கள் எனக்கு இப்பொழுது உண்டாகின்றன—என்கின்றான்.

(12) ப்ராஸ்ப்பீரோவின் கட்டளைப்படி ஏரியல் கொணர்ந்து கொடியில் தொங்கவிட்டிருந்த பகட்டாடைகள் இப்பொழுது ட்ரின்குலோவின் கண்களில் தென்பட, இச்சிற்றனத்தவர் கருத்து அவைகளின்பாற் செல்கின்றது. 'ஸ்ட்டிபானோ மன்னவா' என்று ட்ரின்குலோ பரிகசமாகக் கூவிக் காட்டியவுடன், காலிபன், "காரியம் கையிலிருக்க, ஏமூடா, இக் குப்பையில் கண்ணைச் செலுத்தாதே" என்று தடுக்கவும், ட்ரின்குலோ, "இவ்வுயரிய ஆடைகளை நீ குப்பை யென்று கூறுவதால்மட்டுமே நாங்கள் விட்டுவிடுவோமோ; போட்டுக்கழித்த பழைய ஆடைகள் விற்கின்ற கடைகளில் நாங்கள் ஆடைகள் வாங்கி அறிந்திருக்கின்றோம். ஆகையால், நல்லது பொல்லாதது பார்த்து எங்களுக்கு எடுத்துக்கொள்ளத் தெரியும்"-என்கின்றான்.

(13), (14) ட்ரின்குலோ ஓர் அங்கியை எடுத்து அணிந்துகொள்கின்றான். ஸ்ட்டிபானோ அதற்கே ஆசைப்பட்டு, கழற்றிக் கொடுத்துவிடும்படி கட்டளையிடுகிறான். இக்கையின்மேல் ஆணை, என்பது, கொடுக்க மறுத்தால், இக்கைகளைக் கொண்டு உன்னை நொருங்கப் புடைப்பேன், என்னும் குறிப்புடையது. விரும்பினானையின் உயரியதெல்லாம் அரசனுக்கே உரியதென்னும் கொள்கைபற்றி ட்ரின்குலோவும் கொடுத்துவிடுகின்றான்.

விடுதலை அளிக்கப்புகுகின்ற தலைவர்கள் பழந்துணிக்குச் சண்டையிடும் இந்தச் செய்தி அரசியலுலகில் யாதும் புதுமையன்று.

(15) ஜலோதரம் - மகோதரம் என்னும் நோய்.

(16) இந்தப் பழந்துணிகளை அவாவி இப்பொழுது உங்கள் மதியை இழக்கலாமா—என்பது பொருள்.

(17) அதிசயப்பண்டம்ஆக்குதல்-மனிதரென்ற அடையாளமே தெரியாதபடி கிள்ளுகாயத்தால் உருவம் சிதையும்படி செய்தல்.

(18) துணிகள் தொங்கிய கொடியை, "அம்மா கொடியே' என்று ஒரு பெண்ணாக உருவகம் செய்து முன்னிலைப்படுத்தி அழைக்கின்றான். இவன், கொடியினின்று ஒரு சட்டையைக் கோலினால் இழுக்கும்போது சிக்கிக்கொண்டது போலும். அது கம்பளிச் சட்டையாயிருக்கவேண்டும். அந்தச் சட்டையை, "சட்டையே' என்று முன்னிலைப்படுத்திக் கூப்பிட்டு, உன்னை இப்பொழுது தூக்கி இழுப்பேனானால் சிக்குண்டு உன் கம்பளி மயிரெல்லாம் பிய்ந்துபோய் மொட்டைச் சட்டையாய் முடிவாய்-என்கின்றான்.

(19) கோலுந் தூக்குமாய்த் திருடுகின்றோம் என்பது—ஒழுங்காகத்திருடுகின்றோம் என்று பொருள்படும். கொற்றர் கட்டும் சுவரின் ஒழுங்கு நோக்குவதற்கு உபயோகிக்கும் கருவிகள் கோலும் தூக்கும். "கோலின் கீழ் இருக்கின்றது... தூக்கினால்" என்று ஸ்ட்டிபானோ சொன்ன மொழிகளை ட்ரின்குலோ, "கோலும் தூக்கும்" என்று சேர்த்துச் சிலேடையாக விகடம் பேசுகின்றான்.

(20) இவ்வாறு ஒழுங்காகத் திருடுவதுதான் பிரபுக்களுக்குத் தக்கதாகும்—என்பது பொருள்.

(21) புலவர்களுக்கு அரசர் பரிசில் அளிக்கும் முறைமையில் நடிக்கின்றான். "கோலுந் தூக்குமாய்த் திருடுதல்" என்று ட்ரின்குலோ சொன்னதை வியந்து பின்னுமோர் சால்வை பரிசிலாக அங்கிருக்கும் ஆடைகளினின்று ஸ்ட்டிபானோ எடுத்து அளிக்கின்றான்.

மண்டையின் குத்து, என்பது, புத்தியின் திறமை என்று பொருள்படும் கத்திச்சண்டையில் திறமையாகக் குத்துக்கள் ஏவுவதுபோல், மண்டையிலுள்ள புத்தியால் இந்த விகடம் பேசப்பட்டது,—என்பதீ கருத்து.

(22) காலிபன் ஒன்றையும் எடுத்துக்கொள்ளாதிருப்பதுகண்டு, 'வேடர் கொம்பிற்பசைதடவிப் பறவைகளைப் பிடிப்பதுபோல், நீயும் உன் விரலை வைத்து இவைகளை வாரிக்கொள்"—என்று கூறுகின்றான்.

[காலிபனும் ஸ்ட்டிபானோவும் ட்ரின்குலோவும் துரத்தி ஓட்டப்படுகின்றனர்]

போய் நீ, இவர் கணுக்களை வறட்டு இழுப்பினால் அரைக்கும்படி என் பேய்களுக்குக் கட்டளையிடு. முதிய திமிர்வாயுவால் அவர் தசைகளைச் சுருட்டிவிடு. சிறுத்தையையும் காட்டுப்பூனையையும் விட அதிகம் கிள்ளுப்புள்ளிகள் உடையவர்களாக்கிவிடு. (26).

ஏரியல்:—கேள், கதறுகின்றனர் அவர்.

ப்ராஸ்ப்பீரோ:—நன்றாக வேட்டையாடப்படட்டும் அவர்கள். இந்தக் கடிகையில் என் சத்துருக்களெல்லாம் எனது இரக்கத்தின் அகப்பட்டிருக்கின்றனர் (27). சிறிதுபொழுதில் என் காரியங்கள் முடிவுபெறும்; நீயும் காற்றினைச் சுதந்தரமாக அடைவாய் (28). சிறிது என்னுடன் வந்து எனக்கு வேலை செய்.

[போகின்றனர்]

நான்காம் களம் முற்றிற்று.

(23) ப்ராஸ்ப்பீரோ விழித்துக்கொண்டுவிடுவானாயின் நம்மை நத்தைகளாகவேனும் குரங்குகளாகவேனும் மாற்றிவிடுவான்—என்பது பொருள்.

இழிவுறத்தாழ்ந்த நெற்றி-குரங்குகளின் நெற்றி நிமிர்வதின்றிக் குறுகிப் பின்புறம் சாய்ந்திருக்கும். இத்தகைய நெற்றிமனிதரில் இழிவையும் மூடத்தனத்தையும் துஷ்டகுணத்தையுங் காட்டும்.

(24) என்று, அங்கிருந்த ஆடைகளை மூட்டைகட்டிக் காலிபனது தோளின்மீது சுமத்துகின்றனர்.

(25) பர்வதம், வெள்ளி, மூர்க்கன், கொடியன்-இவை நாய்களின் பெயர்கள்; அல்லது, நாய்வேடம் பூண்டு வந்த ஆவிகளின் பெயர்களாயிருக்கலாம்.

(26) கிள்ளுக்காயத்தால் அவர் தோல், புலி அல்லது பூனைத்தோல் போலப் புள்ளிபுள்ளியாகிவிடும்படி செய்—என்பது பொருள்.

(27) நான் இரக்கம் காட்டினாலன்றித் தப்புதற்கு வழியற்றுக் கிடக்கின்றனர்—என்பது பொருள்.

(28) உனக்கு விடுதலை யளித்துவிடுவேன். பிறகு நீ உன்னிஷ்டம்போல் அடக்குவாரின்றிக் காற்றில் திரியலாம்-என்பது பொருள்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்— 30. வியாகரணம்

[684-வது பக்கத் தொடர்ச்சி]

V. கலி விருத்தம்

(1) கலிவிருத்தங்களில் மிகவும் சிறந்தனவாய்ப் புலவர்களால் கொண்டாடப்படும் விருத்தம் அப்பர் திருக்குறுந்தொகை போன்ற விருத்தங்களே.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்
—பெரியபுராணம் 1.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே
—கம்பராமாயணம் 2.

இவைகளில் அடிக்கு முதலசை நிரையசை யாதலால், பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் ஒவ்வொரு அடியிலும் நிற்கும். நேரசையாயின் பதினொன்றும்.

(உ - ம்)

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே
—கோயில் - திருக்குறுந்தொகை 2.

சீரின் இயலால், மாச்சீரொடு மூன்று கூவிளச்சீர்கள் வருமென்று காண்க. கூவிளத்திற்குப் பதிலாய் மாங்காய்ச்சீர் வரினும் வரும். (முன்கூறிய ஒழிபியல் விதியாலுணர்க)

(2) முதலிரண்டு சீர்களும் விளச் சீராயும், மூன்றுவது மாச்சீராயும், நான்காவது கூவிளச் சீராயும் வருவது இதற்கு உதாரணம். அப்பர் திருவதிகை வீரட்டானம்-திருக்கெடிலவாணர், பண்-காந்தார பஞ்சமப் பதிகம்.

முளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மழுக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே.
—ஷை திருக்கெடில வாணர் பதிகம் 1.

முன்னே கூறப்பட்ட எண்சீர்க்கழிநெடி லாசிரியவகைகளுடன், இக்கலிவிருத்தங்கள் இரட்டித்து எண்சீர்க் கழிநெடிலாய் வருவதும் உண்டு. ஆயினும் அவற்றைக் கலிவிருத்த இரட்டிப்பெனக் கொள்ளலே சிறப்பு. முதல்வகைக் கலிவிருத்தம் இரட்டிய எண்சீர் கீழ்வரும் பட்டினத்தடிகள் பாட்டில் காணலாம்:—

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை னெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சன்மமோ
மூட னாயடி யேனும றிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சன்மமோ
யென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே

இதைக் கட்டளைக்கலிப்பா வெனக் கூறல் சிறப்ட

(3) கலிவிருத்தங்கள் இரட்டி எண்சீர் விருத்தங்களாய் வருவதுபோல், முன் கூறிய எண்சீர் விருத்தங்களிற் பாதி கலிவிருத்த உருவத்தில் வருவதுமுண்டு.

(உ-ம்)

மட்டுவிரி பொழிற்குன்றம் வலவந் தேறி
சட்டவிடா தபுமரவச் சகாயற் போற்றி
யெட்டுருவாங் குமாரலிங்கத் திறைவன் பாத
மட்டுமது மலர்தூவி யஞ்சித் தானல்
தணிகைப் புராணம்

முதல்வகை எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்த மகிய இது அப்பர் திருத்தாண்டகவிருத்த உருவத்தை பாதியாக்கி எடுத்தாற்போல்காணப்படும். இரண்டாவகை எண்சீர் பாதியான கலிவிருத்தம் நமது இலக்கியத்தில் காணப்படவில்லை. இக் கலிவிருத்தங்களில் ஒரு சீர் குறைய வஞ்சிவிருத்தம் ஆவதும் உண்டு:—

அங்க வெல்லை யவுணர்கோ
னெங்க ணுத னெதிருற
மங்குல் போல்வ ரம்பிலாச்
செங்கண் வாளி சிதறினன்
கந்த புராணம்.

(4) முன்னே கூறிய கலிநிலைத் துறைகளில் இரண்டாம் வகுப்பில்* ஒருசீர் குறையவரும் கலிவிருத்தம் சம்பந்தர் திருமுறையிற் காணலாம்:—

பரவக் கெடும்வல் வினைபாரி டஞ்சூழ
விரவிற் புறங்காட் டிறைநின்றெ ரியாடி
யரவச் சடையந் தணன்மேய வழகார்
குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே.
சம்பந்தர் திருத்தென் குரங்காடுதுறை-
பண்-இந்தளம் 1.

*இவ்வகுப்புக் கலித்துறை விதி விருத்தப்பாவியலில்-

[குறிப்பு:—இதில் 4-ம் சீர் குறைய வந்ததால் 2-ம் கலிநிலைத்துறை யாகாமல் கலிவிருத்த மாயிற்று]

இத்தகைய கலி விருத்தங்கள் நாலாயிரப்பிரபந்தத்திலும் காணலாம்:—

கண்ணார்கடல் சூழிலங் கைக்கிறை வன்றன்
திண்ணாகம் பிளக்கச்ச ரஞ்செல வுய்த்தாய்
விண்ணோர்தொழும் வேங்கட மாமலை மேய
அண்ணாவடி யேனிட ரைக்களை யாயே.

திருமங்கை யாழ்வார்-பெரிய திருமொழி 1-ம்பத்து, 10-1

(5) முழுவதும் மாச்சீரால் வருவது:—

தாந்தம் பெருமை யறியார் தூது
வேந்தர்க் காய வேந்த ரூர்போல்
காந்தள் விரன்மென் கலைநன் மடவார்
கூந்தல் கமழுங் கூட லூரே.

சீர்மாங்கனி கூவிளம் கூவிளம் சொற்ற தேமா
நேர்மா விரண்டிற் றனியே குறினிற்கு மென்றூர்
ஓர்மா புளியொ டுறுமா புளிமாங் கனிச்சீர்
சேர்மா விரண்டு மதனக் கொடிதேர் குவையே.
எனக் கூறப்பட்டது.

அமீல்

[686-வது பக்கத் தொடர்ச்சி]

அறம் அல்லது அருளின் உரையாணியாவது பொறுமைக்குண மாகும்.

தன் தேவைக்குத் தக்கபடி கருவிகளை ஓர் தொழிலாளி உபயோகித்தல்போல், இவ் வுலகாதிகளை ஒவ்வொரு ஆன்மாவும் உபயோகிக்கவேண்டுமே யல்லாமல், தான் அவைகளால் ஆட்டி அலப்புறத்தப்பட்டு அழியக்கூடாது.

கொடிய விலங்குகளுக் கெல்லாம் தலைமை பூண்டு விளங்குவது மானுடராசியே யாகும். சமயம் நேரிட்டபொழுதெல்லாம் நிர்ச்சிந்தனையுடனும் நிர்ப்பயத்துடனும் அயலார்களை ஹிம்சித்து அடிமைகளாக்கிச்சிறைப்படுத்திக் கொன்று குதூகலங் கொள்கின்ற பிராணிகள் மானுடராசியிலேதான் இருக்கின்றன! குரூர வார்த்தைகளுக்கும் கொடிய செய்கைகளுக்கும் அனுகூலமான ஆதாரங்களையும் கற்பனைகளையும் சட்டங்களையும் அமைத்து, மதத்தைப் பழித்து, தர்மத்தைத் துறந்து, கடவுளையும் தன்பக்கம் சேர்த்துக்கொள்ள முயற்சித்து ஆரவாரம் புரியும் மிருகம் மனிதன் ஒருவனே யாவான்.

ஓர்வனிதையின் வண்ணத்தையும் அழகையும்அவளுடைய நெற்றியில் உட்காரும் ஈயானது முற்றிலும் அறியுமோ? ஒரு தேகியின் அமைப்பையும் உள்ளப்போக்கையும் அவன் முகத்தின்மீதுஊர்ந்துசெல்லும் எறும்பு உணருமோ? இதுவேபோல், ஒரே வழியைத் தொடர்ந்து, ஒரே விதியைப்பற்றி ஆராய்தலால், நம்முடைய அந்தரங்கப்போக்கும் கருத்தும் புலனாகுமோ? நம்முடைய குற்றங் குறைகளையும் சீர் சிறப்புக்களையும், ஒரு பக்கமும் கோடாமல், பன்முறை பல விதத்தில் ஊன்றிச் சீர் தூக்கிப் பார்ப்பின், உள்ளதை உள்ளவாறு உணரலாம். மாந்தரிற் பெரும்பாலோர் இவ்வாறு செய்வதில்லை. ஆதலினாற்றான், மௌட்டியமும், தற்பொழிவும், வீணுழைப்பும், பற்பல ஆரவாரங்களும் சிறிதேனும் குறைவுறாமல் பெருகியே வருகின்றன.

ஒவ்வொருவருடைய முயற்சியும் அம்முயற்சியின் வழியும், அவ்வவருடைய அறிவு விசாலத்தையும், சிந்தனையின் போக்கையும்,கருத்தின் ஆழத்தையும்,தேகபலத்தையும் ஒத்துள. உலக உலகாதிகளைப் பற்றிய உணர்வும் ஞானமும்அந்தக் குணாதிசயங்களைப் பொறுத்துள.

மானுடரனைவரும் சுகத்தை நாடி உழல்கின்றனர். ஆனால், சுகம் என்பதோ தப்பியோடி மறைந்துவிடுகின்றது.

அழிவு அழிவின்மை, நன்மை தீமை, என்பவைகளைப் பற்றி உன்னியுன்னி நாம் உழல்வதேன்? இருக்கவேண்டியது இருக்கின்றது, அல்லது இருக்கும்; இருப்பது, அல்லது இருக்கப்போவது நன்மைபொருந்தியதாகத்தான் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையை நம்முள் பெருக்குவோம். பின் மனச்சாந்தி ஊறி வளமுறும்.

தூய்மை வாய்மை நேர்மைகளை வளர்ப்பிக்கும் குணமே மதத்தின் பிரமாணமாகும்; அருள் அல்லது பக்தியும், தியாக சிந்தனையும் நம்முள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அதே அளவுடன் மதப்பற்றும் பெருகுகின்றது.

சொர்க்கம் அல்லது உச்சஸ்தானத்திற்கு நம்மை எழுப்பக்கூடியது சங்கீதமாகும்; ஏனெனில், ஒழுங்கு சீர் அல்லது இசைவின் பயனாவது சங்கீதம்; இயைபு பூர்ணத்தின் குணாதிசயம்; பூர்ணம் என்பது நம்முடைய கனவு, அல்லது, மனோபீஷ்டமாவது; இக் கனவுதான் சொர்க்கம்.

நம்மை வருத்துவது வாழ்க்கையுமன்று, உலகமுமன்று, ஆனால் நம் உள்ளும் புறமும் தீமைகள் விரவிநின்று வருத்துகின்றன என்ற பாவனையே யாம்.

பூர்ணத்தின் அசல நித்திய அம்சமே கடவுள்; அதன் இயங்கும் அம்சமே பிரகிருதியாவது. உண்மை

யில் கடவுளுள் பிரகிருதி தோய்ந்து கிடக்கின்றது. பிரகிருதி கடவுளன்று.

ஒவ்வொருவரையும் அவ்வவர் மனோவமைப்பிற்கும் குணத்திற்கும் தக்கபடிதான் கற்பித்துச் சீர்படுத்தி உயர்த்துதற் கியலும்.

சீர்மையின் இலக்கணம் யாதெனின், தன்னலப் பற்றற்றிருத்தல், அல்லது உதார நோக்கம், அல்லது தியாக சிந்தனையுடன் நிஷ்காமப் பணி புரிதலாம்.

நனவுக்கு ஆதாரமாயிருப்பது கனவுபோலும். கனவில் காணப்படுபவைகளே சிந்தனை மூலமாக வெளித்தோன்றிப் பற்பல உருவங்கள் தாங்கிப் படிப்படியாய் விரிந்து ஆழ்ந்து உயர்ந்து இறுதியில் அக்கனவாகவே முடிகின்றது போலும்.

நிமிஷந்தோறும் மாறி மாறி இறப்பதும் மறைவதும், மீண்டும் தோன்றி உயர்வதும், ஒரே சமயத்தில் சாதிப்பதும் மறுப்பதும், அழிப்பதும் நிருமிப்பதும், உயர்த்துவதும் தாழ்த்துவதும், ஏறுவதும் இறங்குவதும், கூட்டுவதும் கலைப்பதுமான பரஸ்பரமுரண்களுடன் விளங்கும் ஒரு விந்தையாம் இவ்வாழ்க்கை. ஊன்றிப் பார்க்கையில், ஒன்றற்கொன்று பொருத்தமற்ற விஷயாதிகளால் உழல்வதும் தேய்வின் மூலமாக வளர்வதும், இறப்பினின்று உயிர்த்தலுமான விஷயங்கள் புலனாகின்றன. இரகசியங்களுளெல்லாம் திகைத்து வியக்கச் செய்யும் மிகப்பெரிய இரகசியம் இவையேபோலும்.

இவ் வுலகவாழ்க்கையானது ஓர் பாலைவனப் பிரயாணத்தை ஒத்ததாகும். வனாந்தரத்தில், பகலில், பிரயாணியைச் சுற்றிலும் கழுகுகள் பறக்கின்றன. இரவில், தேளும் பாம்பும் நரியும் கொதுகும் வருத்துகின்றன. இவ்வண்ணம் பற்பல கஷ்ட நிஷ்டூரங்கள் படையெடுத்து ஓயாமல் அவனைத் தாக்குகின்றன; எனினும், சுகத்தையும் இன்பத்தையும் அமைதியையும் அளிக்கக்கூடிய நாடு ஒன்று அப்பால் உளதாக நம்பி, இந்நம்பிக்கையின் வலிமையினால் மேற்சொல்லிய விபத்துக்களைப் பொறுத்து முன் போகின்றான்.

குலைந்துபோன ஒழுங்கு அல்லது சீர்மையை மீண்டும் பிரஸ்தாபித்தற்காகவேதான் குழப்பங்களும் கலகங்களும் போர்களும் உண்டாகின்றன போலும். இவைகளைத் தூஷித்துப் பழிப்பவர்கள் உண்மையை அறியாதவர்களாவர்.

ராஜீயக் கட்சிகளும், மதவகுப்புக்களும், தத்துவவாதங்களும் சித்தத்தின் இழிய தோற்றங்கள் போலும்.

நம்முடைய வேட்கை அவா விருப்பங்களைப் பூர்த்திசெய்தலும் மறுத்தலும் ஆகிய இருவிதங்களாலும் நம்மைக் கெடுத்துவிடும் திறனுடையதாகும் ஊழ்என்பது. ஜகதீசனது கருத்து எதுவோ அதையே நாமும் கொண்டு சுத்தத் தியானத்தில் ஆழ்ந்துவிடுவோமாயின் ஊழின் வலிமை யாதாகும்?

மனிதனைச் சுற்றியுள்ளவைகளெல்லாம் சலித்து மாறி மழுங்கி உருவழிகின்றன; இவ் வுலகவாழ்க்கையானது ஓர் பொழுதுபோக்காகவும் கட்டுக் கதையாகவும், பிரபஞ்சமானது இந்திரஜாலம் அல்லது வெறும் பிரமையாகவும் தோன்றலாம்; சிந்தனை வுலகமானது பொடியாகிப் பறந்து புகைபோல் மறையலாம்; விஷயாதிகளிலெல்லாம் ஐயமாகிய அம்பு ஊடுருவிப்பாய்ந்து அவைகளைப் பங்கப்படுத்துகின்றது. எனினும், அவைகளிடையில், அவ்விபரீதங்களுக்குட்படாமல் ஒன்றுமாத்திரம் நிலைத்து நிற்கின்றது. எதுவெனின் விசுவசிக்கக் கூடியதும், சஞ்சல மற்றதும், தூய்மை வாய்மைகளுடன் விளங்குவதுமான மாதரார் இதயமேயாம். ஜகத்பிதாவின் தன்மையை மாதாவின் மூலமாக நாம் அறிகிறோம். தெய்விக அருளும் ஆனந்தமுமேதான் இப்பூவுலகில் அன்பும் இன்பமுமாகத் தோன்றுகின்றன; இவ் வன்பு இன்பங்களின் உருவம், அல்லது உறைவிடம், பெண்பாலார் ஆவார். அருளுக்கு ஆதாரமாவது பக்தி; உல்லாசத் தன்மைக்கும், மனோ வொளிக்கும், இதயக் கனிவுக்கும் மூலாதாரமாவது பக்தியாகும்; இப்பக்திக்கு ஊற்றுவது மாதா! அதாவது பெண்.

* * *

முடிவுரை:—"எனது வாணாள் முழுதும் என்னுடைய குற்றங் குறைகளையே கவனித்து, நான் ஒருவனே அற்பன், மற்றவர்களெல்லோரும் சீரியர் எனக் கருதி, அகம்புற ஆராய்ச்சிலேயே மனத்தைச் செலுத்தி, அதைரியம் அவநம்பிக்கை சந்தேக விபரீதங்களைப் போக்கக்கூடிய கர்மங்களில் எது ஒன்றையும் கொள்ளாமல் சுயசக்தியை மழுக்கி வீணானேன்." அவலக்கவலைகளை ஒழிப்பது கர்மமாகும்; கர்மத்திற்கு இன்றியமையாத சாதனங்களாவன தன்னம்பிக்கையும் நன்னம்பிக்கையுமாம்; இந்நம்பிக்கைகளின் சத்ருவாவது மிதமீறிய ஆராய்ச்சி, அல்லது விஷயாதிகளை நுனித்து நுனித்துப் பார்க்கும் குணமேபோலும். எழிற்கலை ஞானமும் புத்தகப் படிப்பும் நூலகளாராய்ச்சியும் பகிர்முக நோக்கமும் மதாசாரங்களும் அறநெறியை யொட்டி யொழுகலும் மதிக்கத்தக்க உபயோகமுள்ளனவே யானாலும், நித்திய நிரந்தர ஞானமும் நிரதிசயானந்தமும் அவைகளினின்று மாத்திரம் உண்டாகிப் பெருகுவனவல்ல. மாந்தரனைவர் அகத்திலும் ஒடுங்கிக் கிடக்கும் சுயஞானத்தைப் பக்தியினால் எழுப்பி வளர்த்து, நிட்காமக் கருமத்தால் வன்மையுறச் செய்யவே சச்சிதானந்தமாகிய பரிபூர்ணத்தை(Absolute)ப்பற்றியஞானம்பெருகலாகும். இஞ்ஞானப்பிரவாகம் ததும்பி ஓடுமுன், பற்பல அவதிகளுக்கிலக்காகித் துடித்து, பற்பல வழிகளைப் பற்றித் தொடர்ந்து, பல்வேறு ஆராய்ச்சிகளிற் புகுந்து நானாவித அநுபவங்களை அநுபவித்து விடுதலை பெறுதல் அவசியமாகும். உலகமும் உலகாதிகளும் உலக வாழ்க்கையும் நன்மையும் அன்று தீமையுமன்று; மற்று, நன்மை தீமைகளென்ற மதிப்புக்களின் ஊற்றான நம்முடைய மனத்தை அவைகள் இயக்கி மெய்யுணர்ந்தறியச் செய்தற்கான திறனுடையனபோலும். பயனற்றவை தோன்றிவளர்ந்து,இருந்து ஒருபோதும் பெருகா;பிரபஞ்ச பரிணாமத்திற்கும்உலகவாழ்க்கைக்கும் காரணம் பிரபஞ்சப் போக்கினாலும் வாழ்க்கையினாலுமே நிரூபிக்கப் படுகின்றது. வாழ்க்கைப்பயன் வாழ்க்கையிலேயே அடங்கியுள்ளது. இவ்வுண்மையை அறிதற்குத்தான் மேற்காட்டிய முயற்சிகள் கைக்கொள்ளப்படுகின்றன. ஆதலின், அம்முயற்சிகளைமேற்கொள்வதற்கு அஞ்சி அவமே இருந்துவிடக்கூடாது. நித்ய நிரந்தர பரிபூர்ண வஸ்துவுடன் ஒன்றுதலேதான் அம் முயற்சிகளின் முடிவும் வாழ்க்கையின் ஆதர்சமுமாவன. இம்முடிவு, அல்லது ஆதர்சத்தை நிறைவேற்றச் செய்வது ஜகதீசனது கடன் என நம்பி, நம்முடைய மனோவாக்குக் காய விஷயாதிகளை அவனிடம் ஒப்புவித்து, நாம் செய்யவேண்டியவைகளை நம்மாலியன்றவரையிலும் நிராயாசத்துடன் செய்யக் கடவோம்.

வியவகாரிக ஞானத்தின் மூலமாகப் பரவஸ்துவை அறிதற் கியலாது. தர்க்க முறையால் மனதின் சக்தியை ஒருவாறு அறியலாம். மூலவஸ்துவை அறிவுறுத்தும் ஞானமார்க்கம் எத்தன்மைய தென்பதையும் அவ் வழிபற்றிச் செல்கையில் நேரிடும் ஐயக் குழப்ப விபரீதங்களையும் ஒருவாறு உணரலாம்; கலைகளினாலும் மனத்தெளிவும் விரிவும் உறுதியும் ஒரு அளவு பெறலாம். எனினும், உலக வியவகாரங்களை அடக்கி அகத்தைச் சீர்படுத்துவதற்குரிய நற்சாதகம்பரிபூரண பக்தியேதான். இப்பக்தியினாற்றான் இறைவனுடன் தோய்ந்து நித்யானந்தனாக விளங்கக்கூடும். கலைப்பயிற்சியினாலும்தர்க்கமுறையினாலும் அறிந்ததைத்தெளிவித்து உறுதிப்படுத்துவது பக்தியாகும். இப் பக்தி தர்க்க முறைக்கு மேலானதாம்.

முற்றிற்று.

பழமுதிர் சோலை

நாலடியார் நகை.

நண்பர்காள், நாலடியார் நூலொன்று நும்புத்தகங்களினிடையே தீண்டப்படாமல் நெடுங்காலம் உறங்கிக்கிடக்குமெனின், இன்று அதனைச் சற்றே தட்டியெழுப்பிக்கைக் கொள்வீராயின் அதன்மேற் படிந்திருந்த புழுதியும் போம், நும் மனத்திருந்த மாசும் போம். புத்தகங்கள்மீது புழுதி மூடமூட மனிதர் மனத்திலும் பழுது சேர்கின்றதென்பதை மறவாதீர். தமிழின் அன்பர் புத்தகங்களை அச்சடித்துத் தருவார், அவ்வளவோடு அவர்கருமம் முடிந்தது. மற்று, மக்கள்பால் உண்மையாய நேயமுடையவர் அவைகளைத் தாமும் நினைத்துப் பிறர்க்கும் நினைவூட்டுவார். அவ்வகை நினைவு ஒன்றிரண்டு இன்று நகநக வருகின்றன—கேண்மின்.

நகுதற் கிலக்காவார் என்றும், பாவம், நல்குரவுடைய ஏழையர். அவர் நுழையுந்திற மறியீராயின்,

நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரின்
நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து

என்பதானறிக. எனினும், நாலடியார் நகையெல்லாலாம் வறியோர் திறத்திற்கே வழங்கப்படுவதன்று. புகைக்கரிய பூழையும் இன்றித் தம் வாயிற்கதவுகளை தம் வன்னெஞ்சால் தூர்த்துவைத்து வறிதிருக்கும் செல்வர்கள் செய்திபைக் காணுங்கால் பின்னுஞ் சிரிப்புப் பெருகுகின்றது.

துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

அருளும் அவன்வைத்த பொருளுமே நக அவ்வச்சையன் அரசு வீற்றிருக்கின்ற பெற்றி இன்னது. நகுவார் நகுவன நகுக, மற்று, அவன்தான் உய்ந்தானோ வெனின் அதுவுமன்று. இவர்தம்மை நோக்குங்கால் நல்கூர்ந்தாரே உய்ந்தார்காண்—

வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தார்
இழந்தா ரெனப்படுத லுய்ந்தார்—உழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல

சற்றே நினைமின்—இதனை அதனகவயின்நல் கூர்ந்தான் செல்வனை நோக்கி,

எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயின்
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

என நகுவதையுங் கேட்டு உடன் நகுவோம். புகை நுழையாப் பூழையூடும், அவ்விரவலனே நுழைய மாட்டாப் பூழையூடும் புகுந்து பாய்ந்து இச்சிரிப்பின் ஒலி வச்சையர் மனத்தினைத் தைக்கவில்லையாயின், ஆ! ஆ! அன்னவர்க்கு இதயமே இல்லை என்பதல்லால் வேறென் விளம்புதற்குளது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :		தைலங்கள்:	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ,,	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ,,	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸௌதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸௌதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை "நஞ்சன்கூடு பல்பொடி" சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) I.D.L. G.I. மெடிகேடட்-டப்பி தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்ததிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக் ஸோல் எவ்வித ஜ்வரங்களுக்கும் ஏஜன்ட் யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு மதுரை

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

7934 நடனங்கள்:—ருஷியாவின் மகா அழகு வாய்ந்த லாம்ப் ஸ்டார்ப் அம்மை என்பவள் மகா யுத்த காலத்திற்கு முன்னே 15,000 மைல் தூரம் கணக்கிடக் கூடியவாறு நடனம் ஆடியிருக்கின்றாளாம். அவளுக்குக் கலியாணம் ஆகா முன்னர் 225 நடனங்களும், கலியாணம் ஆன பின்னர் 557 நடனங்களும் ஆடியிருக்கின்றனளாம். கலியாணத்திற்கு முன்னர்ப் பலநடன விருந்துகளின்போது 18 பேர் அவளை மணந்துகொள்ள விழைந்து கேட்டனராம். கலியாணம் செய்துகொண்ட பின் 272 பேர் காதற் கடிதங்கள் எழுதியனுப்பினராம். 100 பேருக்குமேல் தங்களைக் காதலிக்காவிடில் சுட்டுக்கொண்டு தற்கொலைசெய்து கொள்வதாகக் கடிதங்கள் எழுதியிருந்தனராம். அவள் 1,00 ஆடவர்களுடன் நடனமாடி யிருக்கின்றாளாம். அவர்களுள் 1200 பேர் முட்டாள்களாம்; 300பேர் தொந்தரைக்காரர்களாம்; 120 பேர் சிடுசிடுப்புக்காரர்களாம். 22 பேர் நாசூக்கானவர்களாம். 3 பேர்தாம் ஹாஸ்ய முள்ளவர்களாம். மொத்தத்தில் அவள் 7934 நடனங்கள் ஆடியிருக்கின்றாள்.

* * *

இயேசு கிருஸ்துவின் நெடுஞ்சிலை:—அடியிலிருந்து தலைவரை 30 அடி உயரமுள்ள கிறிஸ்துவின் சிலையொன்று டெண்வர் தொழிற்சாலையில் செய்து முடிக்கப்பட்டுவருகின்றது. இந்தச்சிலையை ஒருமலைச்சிகரத்தின்மேல் வைப்பார்களாம். இதன் எடை 75 டன்களாம். இது பல மைல்கள் தூரம்வரை மக்கள் கண்களுக்குப் புலனாகுமாம். இந்தச் சிலை பல பிரபல சித்திரப் படங்களிலிருந்து செய்யப்பட்டதாம்.

அமெரிக்க நீதி:—அமெரிக்கா ஐக்கிய நாட்டுக் கொளம்பியாவில் விவசாயப் பண்ணையைச்சேர்ந்த ஒரு பெண்ணைத் தாக்கியதாக ஒரு நீக்ரோவன் கைதி செய்யப்பட்டு வழக்கு நடந்தது. கடைசியில் அவன் மீது யாதும் குற்றமில்லையென்று விடுதலைபடைந்தான். ஆனால் அமெரிக்கா வெள்ளையர்கள் அவனை விடவில்லை. ஒரு வெள்ளைக்காரக் கூட்டத்தார் அவனைத் தொடர்ந்து பற்றிச் சித்திரவதை செய்துவிட்டார்கள். அந்த நீக்ரோவன் உடம்பெல்லாம் குண்டுக் காயமாயிருந்தது. அவனது பிரேதத்தை ஒரு மரத்தில் தூக்கியிருந்தார்கள். அமெரிக்க குடியாசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டின் கண்டனத்திற்குப் பின் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

* * *

நாயின் நல்லறிவு:—இங்கிலாந்தில், ஏராளமான வேட்டை நாய்கள் வைத்திருப்பவர்களில் ஸ்ரீமதி விம்புஷ் என்பார் ஒருவர். இவர் அருமையாக வளர்த்த ஒரு நாயைக் கூட்டிக்கொண்டு லண்டன் கடைகளுக்குச் சென்றார். இவர் பல கடைகளுக்குப் போய் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்த காலத்தில் நாயை மறந்துவிட்டார். நாயும் எஜமானி சென்றஇடம் தெரியாமல் திகைத்தது. ஆனால் அது அங்குமிங்கும் ஓடித் தன் எஜமானியைத் தேடவில்லை. நேரடியாக வாடகை மோட்டார்கள் நிற்குமிடத்திற்குச் சென்றது. அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு காரில் திடீரென ஏறிக் குதித்து டிரைவர் பக்கமாய் உட்கார்ந்து, தன் கழுத்தில் கட்டியிருக்கும் செம்புப் பட்டயத்தைக் காட்டியது. டிரைவர் அந்த நாயின் சொந்தக்காரியின் பெயரையும், விலாசத்தையும் வாசித்தறிந்து அந்த விடத்திற்கு ஓட்டிச் சென்றான். உண்மையில் அதுதான் நாயின் எஜமானியின் வீடு.

* * *

மோட்டார் எமன்:—இங்கிலாந்து தேசத்துத்தெருக்களில் ஒவ்வொரு மூன்று நாளிலும் ஆர். 101 என்ற ஆகாயக் கப்பல் விபத்தில் இறந்த அத்தனை ஜனங்கள் மோட்டார் வண்டிகளால் கொல்லப்படுகிறார்கள் என்று மான்செஸ்டரில் நடந்த கால் நடை மனிதர்கள் மகாநாட்டில் ரைஸ் டேவிஸ்என்ற பார்லிமெண்டு மெம்பர் கூறினார்.

* * *

அமெரிக்காவில் குழந்தை மணம்:—அமெரிக்காவில் ஒக்லா ஹாமா நகரத்தில் 67 வயதுசென்ற ஒருவருக்கும் 11 வயதுள்ள ஒருசிறுமிக்கும் கலியாணம் நடந்தது. இந்தத் திருமணத்தை ரத்துசெய்ய வேண்டுமென்று வழக்கு ஏற்பட்டதில் நீதிபதி மணத்தை ரத்துசெய்து அந்தச் சிறு மணமகளைக் கல்விச்சாலைக்கு அனுப்பி வைத்தாரம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ...	... Rs. 1,55,66,720
Out of a business of	... Rs. 1,96,70,000 received in proposals.
Life Assurance is security	for the policyholder from an investment point of view.
	for the policyholder and after him for his wife and children.
Claims paid over	... Rs. 1,00,00,000
Total Assets exceed	... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)